விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 14 புதன்கிழமை (29.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 192

MADRAS CEMENTS LTD
ராம்கோ
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# புலிகளின் கோரிக்கையை நிறைவேற்ற

# கூட்டமைப்பும் ஈ.பி.டி.பியும் முனைப்பு!

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள் நிறைவேறும் சூழல் இலங்கைக்குள் கனிந்து வருவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். தேசியப் பிரச்சினைக்குத் தீர்வெனக் கூறி நாட்டைத் துண்டாடும் சதியில் உள்ளூர் அரசியல் கட்சிகளான தமிழ்க் கூட்டமைப்பும், ஈ.பி.டி.பியும் செயற்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டுகின்றார். (20ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகளின் பேச்சைக் கேட்காவிட்டால் வடக்கில் பழைய நிலை ஏற்படும்!

### மல்வத்து பீடாதிபதி எச்சரிக்கை

(கண்டி)

பௌத்த பிக்குகளின் பேச்சுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாவிட்டால் வடக்கில் மீண்டும் பழைய நிலைமை ஏற்படக் கூடும் என மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறை தலைவர் இராதாகிருஷ்ணன், மல்வத்து பீடாதிபதியை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்க அதிகாரிகள் (20ஆம் பக்கம் பார்க்க)



சவுதி அரேபியாவில் ரிசானா நபீக்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து சவுதி அரேபியத் தூதரகத்திற்கு முன்பாக நேற்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. அதில் கலந்துகொண்டவர்களை படத்தில் காணலாம்.

## சனல் 4க்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

100 மில்லியன் டொலர்கள் நஷ்டஈடு கோரி சனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக 3 நாடுகளில் இயங்கும் புலம்பெயர் சிங்களவர் அமைப்புக்கள் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளன.

கண்கண்ட சாட்சிகள் யாருமின்றி சனல் 4 தொலைக்காட்சியானது போர்க்குற்றங்கள் தொடர்பான போலி வீடியோக்களை வெளியிட்டு இலங்கையர்களுக்கு அவமானத்தை உண்டுபண்ணியதாக குற்றம்சாட்டியே பிரஸ்தாப வழக்கு தொடரப்படவுள்ளது.

அவுஸ்திரேலியா, கனடா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் இயங்கும் புலம்பெயர் சிங்களவர் அமைப்புக்கள் மூன்று ஒன்றிணைந்தே பிரிட்டன் நீதிமன்றத்தில் பிரஸ்தாப வழக்கை தாக்கல்செய்யவுள்ளன. அதன் பிரதிவாதிகளாக சனல் 4 தொலைக்காட்சி சேவையின் ஜோன் ஸ்னோ மற்றும் வீடியோ தயாரிப்பாளர் கெல்லம் மக்ரே ஆகியோர் குறிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்கடத்தல் பட்டியலிலிருந்து இலங்கையை அமெ. நீக்கியது

(வாசிங்டன்)

சட்டவிரோத ஆட்கடத்தல் கண்காணிப்புப் பட்டியலிலிருந்து இலங்கையை அமெரிக்கா நீக்கியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இந்த நீக்கத்தை அறிவித்துள்ளது. இலங்கையுடன் பிலிப்பைன்ஸ் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளும் அமெரிக்கப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் வருடந்தோறும் உலகளாவிய ரீதியில் 27 மில்லியன் ஆண், பெண் மற்றும் சிறுவர்கள் சட்டவி (20ஆம் பக்கம் பார்க்க)

# எந்தவொரு அரசியல் தீர்வையும் நாடாளுமன்றம் அங்கீகரிக்க வேண்டும்



## ஊடகவியலாளர்களிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குமாறு இந்தியா எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான எந்தவொரு அரசியல் தீர்வும் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஊடகவியலாளர்களைச் ஜனாதிபதி நேற்று அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 13ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாகவோ அல்லது அதற்கு அதிகமான விவ (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த வழங்கத் தவறினால் தமிழ்மக்களுக்கு எப்போதும் தீர்வில்லை

### இந்திய ஊடகம் விபரிப்பு

(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்திற்குள் தமிழ் மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாக ஓர் அரசியல் தீர்வினை வழங்காது போனால் அதன் பின் அவ்வாறானதொரு வாய்ப்புக் கிடைக்காது என இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கை அரசியல் நிலைமைகள் பற்றிய இந்திய ஆய்வாளரான என்.சத்தியமூர்த்தி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்கத்தவறினாலோவழங்கவிருப்பமின்றித் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்.வெளிவிவகார செயலாளராக ரஞ்சன் மத்தாய் நியமனம்!


(புதுடில்லி)

இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலாளராக தற்போது பிரான்ஸ் நாட்டிற்கான இந்தியத் தூதுவராகக் கடமையாற்றும் ரஞ்சன் மத்தாய் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகாரச் செயலாளராகவிருந்த நிருபமா ராவ் இப்பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை அடுத்தே (20ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை பார்வையிட்ட பின்பு நிதி ஆணைக்குழுவின் தலைவர் ஆரியரத்தின கேவகே கொண்ட குழுவினர் வடமாகாண ஆளுநர் பணிமனையில் வடமாகண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியுடன் கலந்தாலோசிப்பதையும் படங்களில் காணலாம். படம் - என்.குமார்

# வர்த்தகர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சகலவிதமான நிறுவை நிர்ணயம் செய்யும் கருவிகள் சம்பந்தமான ஒன்றுகூடல் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் வீதியிலுள்ள யாழ்.வர்த்தகர் சங்க கேட்போர் கூடத்தில் வர்த்தக சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சகல நிறுத்தல் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அதி நவீன நிறுவை அலகுகள் தொடர்பாகவும் ஐக்கிய அமெரிக்க உற்பத்தி சம்பந்தமான அறிமுகம் மற்றும் செயன்முறை விளக்கங்களும் வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அனைத்து வர்த்தகர்களும் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (எ-2)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் இன்று புதன்கிழமை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஐக்கிய இராட்சிய பழைய மாணவர் சங்கத் தலைவி திருமதி கீதா விஜயதேவா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் யாவரும் கலந்து சிறப்பிக்குமாறு அதிபர் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

**தவறிவிட்டது**

கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பச்சைநிற Case உடன் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. அதை கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி சபா மல்ரி றேடசில் ஒப்படைக்கவும். ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.இல : 0750499826

(5438)

# தேர்தல் வன்முறைகள் யாழில் இனி இடம்பெறாது

## தேர்தல் திணைக்களம் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் போன்று இன்மேல் யாழ்.மாவட்டத்தில் எந்தவித தேர்தல் வன்முறைகளும் இடம்பெறாது என யாழ்.வந்ததேர்தல் திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

உள்ளூர் அதிகார சபைகள்-2011 தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொள்வதற்கென கொழும்பிலிருந்து தேர்தல் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று வருகை தந்திருந்தது.

இந்தத் தேர்தல் திணைக்கள அதிகாரிகளிடம் அளவெட்டியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்திற்கு அமைவாக சமாதானமாகவும் அமைதியாகவும் நடைபெற வேண்டும் என்பதை தேர்தல் திணைக்களம் விரும்புகின்றது.

அதற்கான நடவடிக்கைகளையே தேர்தல் திணைக்களம் மேற்கொண்டும் வருகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையிலேயே எமது யாழ்ப்பாணத்திற்கான விஜயம் அமைகின்றது.

அளவெட்டியில் நடந்த சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் திணைக்களத்தின் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய முப்படைகளுக்கும் அறிவுறுத்தியுள்ளதோடு தாக்குதல் சம்பவம் நடத்தியவர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுவருகின்றார்.

இது போன்ற ஒரு சம்பவம் எதிர்வரும் காலங்களில் யாழ்.மாவட்டத்தில் இடம்பெறாது இருக்க தேர்தல் திணைக்களம் முயற்சித்து வருகிறது.

இராணுவத்தின் தலையீடு காரணமாக அசம்பாவிதங்கள் ஏற்படுகிறது என்பதை உறுதிப்படுத்தினால் தேர்தல் கடமைகளில் இராணு வத்தினரை ஈடுபடுத்துவதா இல்லையா என தீர்மானிக்கப்படும்.

தேர்தல் காலங்களில் இராணுவத்தினரால் தொந்தரவு இருந்தால் தேர்தல் முறைபாட்டு மத்திய நிலையத்தில் முறையிடலாம்.

பொலிஸாரின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு சம்பவம் சரிவர உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அவர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்குழுவில் முன்னாள் பிரதேச தேர்தல்கள் செயலக உதவி ஆணையாளர் ஏ.ஜி.தர்மதாச, பாதுகாப்பு செயலகத்தின் உதவி செயலக ஆணையாளர் எஸ்மதபேவ, பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.பி.முகமட் ஆகியோர் வருகைதந்தனர். (எ-6)

**PERSONAL Class**

தரம் 1-5 வரை

021 300 7840

தொடர்பு

( 7.00 p.m)

(5435)

**ஆனந்தி திருமணசேவை**

**மணமகன் தேவை**

1976ல் பிறந்த மிருகசீரிடம், செவ்வாய் தோஷமற்ற கிரகபாவம் 50 வரையுள்ள R.C கவர்ச்சியான பெண்ணுக்கு உள்ளூர்/ வெளியூர் மணமகனை விரும்புகின்றோம். அஞ்சல், நேரடி, தொலைபேசி 0212228708 மூலம் தொடர்பு கொள்ளுங்கள். சோதிடர் V.A.சிவராசா 56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**முருகமோட்டை சேற்றுக்கண்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில்**



திருச்சிற்றம்பலம்
யார்க்கும் தமிழினிக்கும் இன்பத்திருவாழ்வு
சேர்க்கும் சிவநெறியும் இவ்வாறே எண்ணில்
பல்கோடி வினை போக்கும் பாவையாம்
சேற்றுக்கண்டி செல்வி திருத்தாள்தான்
திருச்சிற்றம்பலம்

**வருடாந்த மகோற்சவ பெருவிழா**

அம்பிகை அடியார்களே!

நிகழும் கர வருஷம் ஆனித்திங்கள் 13ஆம் நாள் (28.06.2011) செவ்வாய்க்கிழமை துவாதசி திதியும் கார்த்திகை நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய சுப வேளையில் 11.00 மணிக்கு துவஜாரோண (கொடியேற்றம்) ஆரம்பமாகி 11 நாள்திருவிழா நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் நண்ணி இங்கே வந்து எம் பெருமாட்டியின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

| | | |
|---|---|---|
| தேர்த்திருவிழா | 06.07.2011 | புதன்கிழமை |
| தீர்த்தோற்சவம் | 07.07.2011 | வியாழக்கிழமை |

இவ் விழாக் காலங்களில் ஆசாரசீலர்களாக இருந்து அம்பாள் திருத்தொண்டுகள் செய்து அம்பிகையின் அருள்பெறுக.

அன்ன பூரணி அன்னதான சபையினரால் தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

ஆலய சபையினரும், திருவிழா உபயகாரர்களும்

(C-3590)

அதி நவீன ஆடைத்தெரிவுகளுக்கு.......

**ஸ்ரைல் பார்க்**

எடுப்பான தோற்றம் பெற......

புத்தம் புதிய அழகிய டிசையின்களில் வடிவமைக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்குமான ஆடைகளுக்கு நாட வேண்டிய ஒரே இடம்

Style Park
171, K.K.S Road,
Jaffna.





**பணியாளர் தேவை**

உரும்பிராயில் இயங்கும் பெண்பிள்ளைகளின் இல்லத்திற்கு சமையல் பணி, உதவிகள் செய்ய பெண் பணியாளர்கள் தேவை. அத்துடன் தோட்ட பராமரிப்பு வேலைகளுக்கு ஆண் பணியாளரும் தேவை.

தொடர்புகளுக்கு : 021 2230891, 0774584191

என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இ தலைவர்

**முனியாண்டி உணவகம்**

**(கச்சேரி முன்பாக கிளிநொச்சி)**

**பணியாளர் தேவை**

- எல்லா வகையான உணவு வகைகளையும் தயாரிக்கக் கூடிய சமையலாளர்.
- தேனீர் தயாரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்

போன்ற பணி நிலைகளுக்கு உடன் ஆட்கள்தேவை.

மேலுள்ள முகவரிக்கு உடன் நேரில் வரவும்.

(C-3589)

# இன்று ஒரு தகவல்

## அரசரிடம் பாட்டி கேட்ட கேள்வி

ஓர் ஊரில் மகாராஜா ஒருவர் இருந்தார்.

அவர் மிகவும் நல்லவர்; தர்மசிந்தனை உள்ளவர்.

அவர் எல்லோருக்கும் எல்லா உதவிகளையும் எப்போதும் செய்து வந்தார்.யாருக்கும் அவர்,

"இல்லை" என்று சொல்ல மாட்டார்.

ஒரு சமயம் அவர் ஒரு பெரிய காட்சிச்சாலையைத் திறந்து வைத்தார்.

அதில் ஏகப்பட்ட பொருட்கள் இருந்தன. அவை எல்லாவற்றையும் இலவசமாக மக்களுக்குக் கொடுப்பதற்காக மகாராஜா அங்கு வைத்திருந்தார்.

"இந்தக் காட்சிச்சாலைக்கு யார் வேண்டுமானாலும் வரலாம்; எந்தப் பொருளை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகலாம்; காசு கிடையாது! ஆண், பெண் எல்லோரும் வந்து அவரவர்களுக்கு விருப்பமான பொருட்களை இங்கிருந்து எடுத்துக் கொண்டு போங்கள். அதற்கேற்ப இந்தக் காட்சிச் சாலையை ஏற்பாடு செய்திருக்கிறோம்! என்று அங்கு அரசு அதிகாரிகள் அறிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்சிச்சாலைக்கு ஏராளமான மக்கள் வந்தார் கள்.

அவரவர்களுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலர் தங்களுக்குத் தேவையான வேட்டி சட்டைகளை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சில பேர் வந்து அங்கே இருந்த விலையுயர்ந்த நகைகளை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலபேர் வந்து அங்கே இருந்த நல்ல புத்தகங்களை எடுத்துக் கொண்டு சென்றார்கள்.

சிலபேர் இரும்புப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள்.

சிலபேர் நல்ல பழவகைகளை எடுத்துக் கொண்டார்கள்.

அதனால் எல்லோருக்கும் முழு மனநிறைவு ஏற்பட்டது. அங்கிருந்து அவர்கள் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார்கள்.

காட்சிச்சாலையைப் பார்க்க வந்தவர்களில் ஒரு வயதான அம்மா இருந்தார். அவர் மட்டும் அங்கிருந்து எதையும் தொடவில்லை. அவருக்கு மனநிறைவு இல்லை.

எல்லோரும் ஆச்சரியமாக அந்த அம்மாவைப் பார்த்தார்கள்.

'ஊர் மக்கள் எல்லோருக்கும் மன நிறைவு... அந்த அம்மாவுக்கு மட்டும் மனநிறைவு இல்லையா?' என்று அனைவரும் நினைத்தார்கள்.

அவர்கள் அவரிடம், "ஏன் பேசாமல் சும்மா இருக்கிறீர்கள்? உங்களுக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ள வேண்டியது தானே?" என்று வினவினார்கள்.

இங்கே இருக்கும் எந்தப் பொருளும் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை! நான் மகாராஜாவைப் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

அங்கே இருந்த திவான் ஓடிப்போய் மகாராஜாவிடம் விவரம் தெரிவித்தார்.

உடனே மகாராஜா ஒரு யானை மீது ஏறிக்கொண்டு அந்த அம்மாவைப் பார்ப்பதற்காக வந்துவிட்டார்.

அந்த அம்மா மன்னரைப் பார்த்து "மகாராஜா! கீழே இறங்கி வாருங்கள்... ஒரு முக்கியமான விடயம் பற்றி உங்களிடம் பேச வேண்டும்!" என்றார்.

அரசர் யானையிலிருந்து கீழே இறங்கினார்.

அந்த அம்மா ராஜாவின் வலது கையைப் பிடித்துக் கொண்டு "மகாராஜா! இப்போது நீங்கள் எனக்குச் சொந்தமாகிவிட்டீர்கள். இந்தக் காட்சிச்சாலையில் இருக்கும் சின்னச் சின்ன பொருட்களையும் விளையாட்டுப் பொம்மைகளையும் நான் விரும்பவில்லை. உங்களைப் பெறவேண்டும் என்றுதான் விரும்புகிறேன். நீங்கள் எனக்குச் சொந்தமாகிவிட்டதால் இந்த இராஜ்யத்தின் செல்வம் முழுவதும் இப்போது எனக்குச் சொந்தமாகி விட்டது!" என்று கூறினார்.

மகாராஜா மலைத்துப்போய் நின்றார். அந்த அம்மாவைக் கடைசி வரையில் தன் அரண்மனையிலேயே வைத்து தாய் மாதிரி கவனித்துக் கொண்டார்.

நமக்குப் பலவிதமான ஆசைகள். அதனால் அந்தந்த ஆசைக்குரிய பொருட்களை நாம் தேடிச் செல்கிறோம். இப்படிச் செய்வதால் நமக்குத் திருப்தியே உண்டாவதில்லை.

ஆசைக்கு அடிமையாகிறவர்கள் பிச்சைக்காரர்களுக்கும் பிச்சைக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள்.

உலக இச்சைகளையும் பொருட்களையும் துறந்து இந்தப் பரந்த பிரபஞ்சத்தின் மூலம் பரம்பொருளைப் பெற்றுவிட்டால், உங்களுடைய எல்லா ஆசைகளும் பூர்த்தி ஆகிவிடும்! என்று ரிஷிகேஷ் சுவாமி சிவானந்தர் கூறுகிறார்.

"எப்படி ஞானம் உள்ள அந்த வயதான அம்மா மகாராஜாவைச் சொந்தமாகப் பாராட்டி அவருடைய செல்வத்திற்கெல்லாம் அதிபதியாக ஆனாரோ..., அப்படியே நீங்கள் இறைவனைப் பெற்றுவிட்டால் எல்லா வசதிகளும் உங்களைத் தேடிக் கொண்டு வரும்" என்கிறார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை எழுபத்தேழாயிரம் பேர் மீள்குடியேற்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 24 ஆயிரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 77 ஆயிரத்து 74 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளிபுனம் பிரதேசத்தில் 311 குடும்பங்களைச் சேர்ந்த 917 பேர் மீள்குடியமர்த்தப் பட்டனர்.

இறுதிக் கட்ட மோதல்களின் போது இடம்பெயர்ந்து செட்டிக்குளம் மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு மீள்குடியமர்த்தப் பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் தெரிவித்தது.

உடையார்கட்டு பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட இவர்கள் உரிய பதிவுகளுக்கு உட்படுத்தப் பட்ட பின்னர் சொந்த வீடுகளில் குடியமர்த்தப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் குறிப்பிட்டது.

எதிர்வரும் சில தினங்களில் முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டு வடக்கு பிரதேசத்தில் மேலும் 337 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட உள்ளனர். (ஸ்ரீ-4)

## உயர் தொழில்நுட்பவியல் மாணவர்களின் பட்டமளிப்பு

(கொழும்பு)

உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2010 ஆம் ஆண்டில் முழுமையாக பாடநெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு எதிர்வரும் 07.11.2011 இல் பட்டமளிப்பு விழா நடைபெற தீர்மானிக்கப்பட்டுள்ளதால் தகைமையுடைய மாணவர்கள் மக்கள் வங்கியில் SLIATE-02510013397613 என்ற கணக்கிற்கு இரண்டாயிரம் ரூபாவை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் 11.07.2011 இற்கு முன்னர் நிறுவனப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

## க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கான இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழகத்திற்கு முன்பாகவுள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்வழிகாட்டல் கருத்தரங்குகள் ஒவ்வொரு நாளும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மதியம் ஒரு மணிக்கு நிறைவடையும். 15 ஆம் திகதிக்குரிய பௌதிகவியல் பாடத்திற்கான கருத்தரங்கு மாத்திரம் பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை பொருளியலும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி புவியியலும் 2 ஆம் திகதி கணக்கீடும் 3 ஆம் திகதி வணிகக்கல்வியும் 4 ஆம் திகதி அரசியல் விஞ்ஞானமும் 6 ஆம் திகதி உயிரியலும் 7 ஆம் திகதி இரசாயனவியலும் 8 ஆம் திகதி இணைந்த கணிதமும் 9 ஆம் திகதி ஆங்கிலமும் நடைபெறவுள்ளன. இக்கருத்தரங்கானது பல்லூடக எறிகருவியின் துணையுடன் விளக்கமளிக்கப்படவுள்ளதோடு பரீட்சைக் குறிப்புகள் அடங்கிய இலவச கையேடுகளும் வழங்கப் படவுள்ளன.எனவே, அனைத்து மாணவர்களும் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஸ்ரீ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வெலி | சாவகச்சேரி |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 45 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 70 |
| தக்காளி | 35 | 50 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 70 | 60 | 70 |
| கரட் | 70 | 60 | 60 |
| பூசணி | 25 | 30 | 30 |
| புடோல் | 35 | 40 | 25 |
| வாழைக்காய் | 30 | 30 | 25 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 100 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- |
| பயற்றங்காய் | 70 | 80 | 60 |
| லீக்ஸ் | 50 | 60 | 70 |
| பீற்றூட் | -- | 80 | 60 |
| கறிமிளகாய் | 80 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 150 | 200 | 130 |
| போஞ்சி | -- | 140 | -- |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 5-8 | 20 | 20 |
| தேசிக்காய் | 80-100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 50 |

## இராசி பலன்

*29.06.2011*

*(ஆனி 14, புதன் கிழமை)*

*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*

*திரயோதசி பிற்பகல் 2.53மணி வரை*

*ரோகினி முன்னிரவு 10.49 மணிவரை*

*இராகுகாலம் 11.56-1.26 மணி வரை*

*சுபநேரம் 4.26-5.56 மணிவரை*

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணைபுரிவர், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள நினைப்பீர்கள்.

**இடபம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்துகொள்வர்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை, தொழில் நலன் கருதி திடீர் பயணங்கள் ஏற்படாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கடகம்** கௌரவம், அந்தஸ்து உயரும் நாள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், கலகலப்பான செய்திகள் வந்துசேரலாம், பொருளாதார நிலை திருப்திகரமானதாக அமையும்.

**சிங்கம்** செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணை புரிவர், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தந்தை வழியில் அனுகூலங்கள் கிடைக்கலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், வியாபார விருத்தியுண்டு.

**துலாம்** எதிர்பாராத வகையில் சில பிரச்சினைகள் ஏற்படாலாம், கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வரவும் செலவும் சமமாகும், எடுத்த முயற்சிகள் தாமதமாகலாம்.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகமடையும் நாள், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடையும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** மறைமுகப் போட்டிகள் மாறும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு, பிறருக்காக பொறுப்பு நின்று கொடுத்த தொகை வந்து சேரும்.

**கும்பம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், ஆச்சரியமான செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள்,குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், நீண்ட நாளைய வழக்குகள் சாதகமாக அமையும், பிரயாண நன்மையுண்டு.

வளவன்

# வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் உள்ள வன்னிச்சி அம்மன் கம்பர்மலை வீதியுடன் இணைந்து காணப்படும் கம்பர் மலை வித்தியாலயத்திற்கு செல்லும் மாத்திராவளவு வீதியானது நீண்ட காலமாக செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இவ்வீதியால் பயணிப்பவர்கள் வீதி சீரின்மை காரணமாக பல கஷ்டங்களை எதிர் கொள்கின்றனர்.

மழை காலங்களில் நீர் வடிந்தோடுவதனால் குறித்த வீதியின் பகுதிகள் விரைவாக அரிக்கப்பட்டு மண் அள்ளுண்டு செல்வதால் பாரிய குழிகள் காணப்படுகிறது.

தற்போது பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள் என பலர் இவ்வீதியினை தமது அன்றாட தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். அத்துடன் கம்பர் மலை மக்கள் கொம்மந்தறை, கெருடாவில் ஆகிய இடங்களுக்கு செல்வதற்கு குறுகிய பாதையாக மாத்திராவளவு வீதியை பயன்படுத்துகின்றனர்.

மேற்படி வீதியை புனரமைக்கக் கோரி இப்பகுதி வாழ் மக்கள் கரவெட்டி பிரதேச செயலரிடம் நேரில் சென்று முறையிட்டும் பயனளிக்கவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மக்கள் பாவனைக்கு உகந்த வீதியாக அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 8 மாத சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டும் என சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொடிகாமம் மிருசுவில் பிரதேசத்தில் குறித்த நபர் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டதாக கொடிகாமப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர்-கணேசராசா முன்னிலையில் மன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி தீர்ப்பினை வழங்கியதுடன் சான்றுப் பொருளை அழிக்க மன்றுக்குக் கட்டளையிட்டார். (ஸ்ரீ-24)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அருள்மிகு சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் ஜுலை 13 ஆம் திகதி மாலை 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

# கடிவாளம் பத்திரிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் டிப்ளோமா கற்கை நெறி மாணவர்களின் பயில்நிலம்-01 கடிவாளம் பத்திரிகை வெளியீடு இன்று பிற்பகல் 2.30மணிக்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன், குடாநாட்டுப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ)

# தென்னை வளத்திலிருந்து பெறுமதிசேர் உற்பத்தி பொருட்கள் உருவாக்கல் பயிற்சி

(சாவகச்சேரி)

கச்சாய் மாதர் அபிவிருத்தி சங்கத்தில் 50 யுவதிகளுக்கு தென்னைவளத்திலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிநெறி நேற்றைய தினம் காலை 9.30 மணிக்கு கச்சர் மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியில் 50 பயிற்சியாளர்கள் பயற்சிக்காக இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

பிரதேச மக்களும்,கைத்தொழில் அபிவிருத்திச்சபை அதிகாரிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். (ஸ்ரீ-29)

# மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான ஜுலை மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அச்சுவேலி தெற்கு கிராமங்களுக்கு கேபிள் தொலைபேசி இணைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு கிராமங்களுக்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினர் கேபிள் தொலைபேசி இணைப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் தொலைத் தொடர்பு கம்பங்களை நாட்டி வயர் இணைப்புக்களையும் தற்போது மேற்கொண்டு வருகிறார்கள்.


தொலைபேசி இணைப்புத் தேவையான பொதுமக்கள் விண்ணப்பப் படிவங்களை ஸ்ரீலங்கா ரெலிக்கொமில் பெற்று பூரணப்படுத்தி வழங்குவதன் மூலம் இணைப்புக்களை பெற்றுக் கொள்ள முடியுமென ஸ்ரீலங்கா ரெலிக் கொம் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-70)

# அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் 6 பேரின் தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவ் அடையாள அட்டைகளின் விபரம் வருமாறு, சிவகுருநாதன்-சிவனேஸ்வரி, பொன்னாலை களபூமி, காரைநகர் (787924255V), சிவசுப்பிரமணியம்-ஜெயாழினி, யு. எம்.யு. வீதி, கற்பிட்டி(855900726V), மாட்டீன்-ஜெயராஜா நிர்மலா. யஸ்தஸ் வீதி, புதுவளவு, சுன்னாகம், பனிப்பாஸ்-நிர்மலா. மானிப்பாய் (616913786V), கணபதி. பாலசங்கர்.குடத்தனை (691213226V), பொன்னையா. சேதுப்பிள்ளை. வரணி,(326924172V)உரியவர் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)




# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வர சிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் ஜுலை மாதம் 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 7ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும் என்பதனை ஆலய தர்மகர்த்தா சபையினர் அறியத் தருகின்றனர். (ஸ்ரீ)

# வடகடலின் எல்லைக் கோடுகள் அரசினால் வரையப்பட வேண்டும்

## வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவிப்பு

வடகடலின் எல்லலைக்கோடுகள் இலங்கை அரசாங்கத்தினால் வரையப்பட வேண்டும். அப்போதுதான் இந்திய எல்லையைத் தாண்டும் மீனவர்களின் நிலையை இந்திய அரசுகளுக்கு எடுத்துக்காட்ட முடியும் என வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலை வர் எஸ். தவரெட்ணம் தெரிவித்துள்ளார்.

மீனவ சமூகம் பாரிய பின்னடைவை எதிர் நோக்கி வருகின்றது. அந் நிலையை மாற்றுவதற்காக பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மீனவ சமூகத்திற்கு உதவி செய்ய வேண்டும்.

அத்தோடு வடகடல் மீன் வளத்தைப் பாதுகாப்பதால் தான் மீனவ சமூகம் உயர்நிலையை அடைய முடியும். அதற்காக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் வடகடல் வளம் சுரண்டப்படுவதை இந்திய அரசு கண்டும் காணாமல் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலை தொடர்வதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)





யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சூழல் மாசடைதல் தொடர்பான கலந்தரையாடல் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் அருகில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி. ரமேஸ், மாநகரசபை முதல்வர் திருமதி யோ. பற்குணராசா உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டஅதிகாரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# மலேசியாவில் அகதிகள் பாதுகாக்கப்பட வேண்டும்

## மலேசிய சட்டவல்லுநர்கள் சபை கோரிக்கை

மலேசியாவில் உள்ள வெளிநாட்டு அகதிகள் உரிய முறையில் பாதுகாப்பட வேண்டும் என மலேசிய சட்டவல்லுநர்கள் சபை கோரியுள்ளது.

மலேசியாவில் உள்ள அகதிகளுக்கான சுகாதார வசதி, கல்வி மற்றும் வாழ்வாதாரம் என்பன சிறந்த முறையில் பேணப்பட வேண்டும் என மலேசிய சட்டவல்லுநர் சபையின் தலைவர் லிம் சீ.வீ. தெரிவித்துள்ளார்.

அவர்கள் மனிதாபிமான முறையில் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ள அவர், மலேசியாவில் உள்ள சுமார் ஒரு இலட்சம் அகதிகள் இருபது சதவீதமானவர்கள் மாணவப்பருவத்தைக் கொண்டவர்கள் என சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையினால் 1951 ஆம் ஆண்டு அகதிகள் குறித்த பிரகடனத்திற்கமைய மலேசியாவில் உள்ள அகதிகளும் உரிய முறையில் பேணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மலேசியாவில் தற்போது இலங்கை, சோமாலியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பாலஸ்தீனிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளே அதிகளவில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-4)

# 25 மில்லியன் ரூபா செலவில் விமலின் அமைச்சுக்கு வாகனம்

வீடமைப்பு நிர்மாணம் மற்றும் பொறியியல் துறை அமைச்சரான விமல் வீரவன்ச தனது அமைச்சுக்கென சுமார் 25 மில்லியன் ரூபா செலவில் மூன்று சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்துள்ளனர்.

அமைச்சின் செயலாளரின் பெயரில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த மூன்று வாகனங்களுக்கும் சுங்கவரி செலுத்தப்படாத நிலையிலேயே இலங்கைத் துறைமுகச் சுங்கத்திலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுங்கத்தீர்வை பின்னர் செலுத்தப்படும் என்ற உறுதிமொழி வழங்கப்பட்ட பின்னரே இவை துறைமுகத்திலிருந்து வெளியில் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இந்தச் சொகுசு வாகனங்களில் இரண்டு அமைச்சர்கள் விமல் வீரவன்ச, பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ச ஆகியோருக்கும் மற்றையது அமைச்சின் பாவனைக்கும் எனக் கூறியே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் லாண்ட்குரூசா 99 இலட்சம் ரூபா இரண்டாவது வாகனத்தின் பெறுமதி 76 இலட்சம் ரூபா டொயாட்டா கிரவுண் 74 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# ரிசானாவின் மரணதண்டனை குறித்த செய்திக்கு இலங்கை மறுப்பு

சவுதி அரேபியாவில் குழந்தையொன்றை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ரிசானா நபீக்கிற்கு பகிரங்க மரண தண்டனை வழங்கப்படவுள்ளதாக வெளியான செய்தியை மறுத்துள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் 'ரிசானா நபீக்கின் விடுதலைக்காக சவுதி அரேபிய அதிகாரிகளுடன் இணைந்து கடுமையாக பாடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய எஜமானரை கொலை செய்த இந்தோனேஷிய பெண்ணொருவருக்கு அண்மையில் பகிரங்க மரண தண்டனையாக கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் காரணமாக ரிசானாவின் மரண தண்டனை குறித்த ஊகங்கள் வெளியாகியிருக்கலாம் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

ரிசானா நபீக்கின் விடுதலைக்காக நாங்கள் கடுமையாக பாடுபடுகின்றோம். இது தொடர்பில் சாதகமானதொரு பதில் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என அவர் கூறினார் .

(ஸ்ரீ-4)



கச்சாய் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவர்கள் வெற்றிக் கிண்ணங்களுடன் நிற்பதையும் அருகில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், அதிபர் க.மங்களேஸ்வரன், விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-சாவகச்சேரி செய்தியாளர்)


இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



இருபத்துமூன்றாம் திருவிழா (29.06.2011)

வீதி உலாக்கந்தன் அருள் காண வாரீர்

பாரெல்லாம் அருள் பாய்ச்சிட
பவளம் முத்து சிவிகைகளில் பால முருகா!
உன் தொண்டர்கள் சுமந்துவரும்
காட்சி வட இலங்கையில் எங்குமில்லை
முருகா! உன் திருவடி நிழலிலே இத்தனை
அற்புதம் கந்தா!
உன் திருவடி நிழலில் கோடி
புண்ணியம் நல்கும் புனிதக் கிணற்றுநீரை
பருகியதும் நோய்கள் தீர்த்திடுவாய் முருகா!

சைவப் புலவர் சாந்தன்

(5114)

இணுவில் கந்தனின் தேர்த்திருவிழாவின் நேரடி ஒளிபரப்பை காலை 8.00-12.00 மணிவரை www.sivantv.com என்ற இணையத்தளத்தின் ஊடாக கண்டுகளிக்கலாம்.

23 ஆம் திருவிழா உபயகாரர்


# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13 ஆவது திருத்தத்திற்கப்பால் செல்ல வேண்டும்

## அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்கு தீர்வாக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அப்பால் செல்ல வேண்டும். அதாவது 13 ஆவது திருத்தத்தை தாண்டி செல்ல வேண்டும் என்பதனை நான் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகின்றேன்.

அத்துடன் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து ஆராய நியமிக்கப்படுவதற்கு முயற்சிக்கப்படும் நாடாளுமன்ற தெரிவிக்குழுவுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து ஆராய நியமிக்கப்படுவதற்கு முயற்சிக்கப்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழு விடயம் குறித்து விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-4)

# பிரான்சிடமிருந்து 3 புதிய விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன

இலங்கை பயணிகள் சேவைக்காக மூன்று புதிய விமானங்களை பிரான்சிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளதுடன் அதற்கான உடன்படிக்கையில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

சிங்கப்பூர், மலேசியா போன்ற குறுந்தூர பயணங்களுக்காக ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு புதிதாக மூன்று விமானங்களை இணைத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏ-3-12 பயணிகள் விமான வகையைச் சேர்ந்த இம்மூன்று விமானங்களும் வர்த்தக வகுப்பு, பொருளாதார வகுப்பு மற்றும் சாதாரண வகுப்பு உள்ளிட்ட 140 ஆசனங்களைக் கொண்டுள்ளதென விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்தார்.

பிரான்சில் உற்பத்தி செய்யப்படும் இம்மூன்று விமானங்களையும் இலங்கைக்குப் பெற்றுத் தருவதுடன் தொடர்புடைய ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் இந்த விமானங்கள் இலங்கையை வந்தடைய உள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (ஸ்ரீ-4)

# சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபட்ட இலங்கையர் சென்னையில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு குடியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இலங்கை பிரஜை ஒருவர் சர்வதேச பொலிஸாரால் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச பொலிஸார் 7 வருடங்களுக்கு முன்னர் இந்த நபரை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பித்திருந்தது. திருகோணமலையை சேர்ந்த பெரின் ஜோசப் என்ற இந்த நபர் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருமாறு இந்திய மத்திய புலனாய்வுத் துறை இந்தியாவில் உள்ள அனைத்து பொலிஸ் மற்றும் விமான நிலையங்களுக்கு அறிவித்திருந்தது.

இந்த நிலையில் கடந்த 26 ஆம் திகதி சென்னையில் இருந்து இலங்கை செல்லவிருந்த விமானத்தில் ஏற தயாராக இருந்த போது சென்னை விமான நிலைய பொலிஸாரினால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் இந்திய மத்திய புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-4)







மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தின் ஆரம்பக்கல்வி மாணவர்களின் தலைமைத்துவப் பண்பையும் அரங்க நிகழ்வுத்திறன்களையும் மேம்படுத்தும் நோக்குடன் சிறுவர் அரங்க பயிற்சிப்பட்டறை அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து நிகழ்வில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம்.

# இலங்கையருக்கு பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான செவாலியர் விருது வழங்கி கௌரவம்



பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான செவாலியர் விருது பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த நாகநாதன் வேலுப்பிள்ளை என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவருக்கான விருதை இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் கிரிஸ்டின் றொபின்ஸன் நேற்று முன்தினம் வழங்கிக் கௌரவித்தார்.

23 ஆண்டுகளுக்கு மேலாக பிரெஞ்சு அரசாங்க சேவையில் பணிபுரிந்த இவர் பம்பாயில் அமைந்த தூதரக அலுவலகத்தில் வர்த்தக சேவையில் சட்ட ஆலோசகராகப் பணிபுரிந்தவர். இவர் ஒரு சட்டத்தரணியுமாவார். பாரிஸில் சர்வதேசப் பொருளாதார உறவுகள் என்னும் துறையில் பட்டப்பின் கற்கை நெறியில் தகைமை பெற்றார். இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகளை விருத்தி செய்யவும் இந்தியாவில் முதலீடு செய்யவும் விழைந்த பிரெஞ்சுக் கம்பனிகளுக்கு இவர் சர்வதேச வர்த்தக நெறிகளுக்கு அமைய சட்ட ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

பிரெஞ்சு மொழியில் பாண்டித்தியம் பெற்றுள்ளதுடன் பிரெஞ்சு அரசாங்கத்துக்காக பல நூல்களை பிரெஞ்சு மொழியில் எழுதியுள்ளார். 412 பக்கங்கள் கொண்ட இந்தியாவில் முதலீடு செய்தல் தொடர்பான அவரது நூல் பிரெஞ்சுக் கம்பனிகள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றது.

வெளிநாட்டு முதலீடு ஏற்றுமதி -இறக்குமதி என்னும் விடயங்கள் பற்றிய பிரெஞ்சு மொழி நூல்களுள் இந்த நூல் கணனி வழி விற்பனை நிறுவனமான அமேசன் நிறுவனத்தின் சிறந்த விற்பனைப் பட்டியலில் நீண்டகாலம் தொடர்ச்சியாக முதல் 100 இடங்களுள் ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. 2007 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட இந்த நூல் 2010ஆம் ஆண்டில் மாற்றீடு செய்யப்பட்ட பின்னரும் புதிய நூலுடன் இந்த நூலும் முதல் 100 இடங்களுள் இன்றும் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவில் முதலீடு செய்தல், வர்த்தகம் செய்தல் என்னும் விடயங்கள் தொடர்பில் அவர் பாரிஸில் பல கலந்துரையாடல்களிலும் கூட்டங்களிலும் பங்குபற்றி பிரெஞ்சு மொழியில் உரைகள் நிகழ்த்தியுள்ளார். அவரது இச்சேவைகளைப் பாராட்டு முகமாக பிரெஞ்சு அரசாங்கம் செவாலியர் என்னும் விருதை அவருக்கு வழங்கியுள்ளது. தாய்மொழியான தமிழுடன் ஆங்கிலம், பிரெஞ்சு, சிங்களம், இந்தி என்னும் மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவராவார். (ஸ்ரீ-2-4)

# வீதி புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள 2 கிலோமீற்றர் வீதி மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் இரண்டு மில்லியன் ரூபா நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

புனரமைப்பு வேலைகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் தவநாதன், அக்கராயன் கிராம சேவகர் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மீள் எழுச்சித் திட்டபிரதித் திட்டப் பணிப்பாளர் இ.இராசாசுவேந்திரன் மற்றும் கெங்காதரன் குடியிருப்பு மக்கள், அக்கராயன் கிராமக்கள் அயல் கிராம மக்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

# தேங்கியுள்ள தபால் பொதிகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பம்

தபால் அதிபர்கள் மேலதிக நேர பணியினை புறக்கணித்ததால் 70 ஆயிரம் தபால் பொதிகள் விநியோகிக்கப்படாமல் தேங்கியிருந்தன.

இந்த நிலையில் அவற்றை விநியோகிக்கும் நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தபால் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தபால் துறை அமைச்சர் ஜீவன் குமாரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைய தபால் தலைமையகத்தில் பொதிகளை பிரிக்கும் நடவடிக்கைகளுக்காக மேலதிக பணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன் பின்னர் 18 ஆயிரம் தபால் பொதிகளைப் பிரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

அவற்றுள் 15 ஆயிரம் பொதிகள், கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கான விண்ணப்பங்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கல்வி பொதுத் சாதாரண பரீட்சைக்கான தனியார் பரீட்சார்த்திகளின் விண்ணபங்களுக்கும், 2012ஆம் ஆண்டு முதலாம் தர மாணவர்களுக்கான விண்ணப்பங்களுக்கும் முன்னுரிமை வழங்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். (ஸ்ரீ-4)

# மரமுந்திரிகை செய்கையை விருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பம்

அநுராதபுரம், பொலநறுவை, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் மரமுந்திரிகை செய்கையினை விருத்தி செய்யும் வேலைத்திட்டமொன்றை மரமுந்திகை கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக அநுராதபுரம் மாவட்டத்தினுள் சுமார் 5000 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை பயிரிட்டுள்ளதோடு தற்போது இவ்வலயத்தினுள் நிலவும் சமாதானச் சூழல் காரணமாக மரமுந்திரிகை பயிர்ச்செய்கையினை விருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் வலய முகாமையாளர் எஸ்.டீ.வருஷவிதான தெரிவித்தார்.

அரசாங்கத்தின் திவிநெகும திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் இவ்வருடம் அநுராதபுரம் மாவட்டத்தினுள் கிராம சேவகர் மட்டத்தில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் விதை மற்றும் மரமுந்திரிகை கன்றுகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது.

இதேவேளை இவ்வருடத்தினுள் அநுராதபுரம் மாவட்டத்தில் புதிதாக 450 ஏக்கரில் மரமுந்திரிகை நடும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தில் 538 குடும்பங்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களுக்குத் தேவையான மரமுந்திரிகை கன்றுகள், உரவகைகள் மற்றும் ஆலோசனைகளும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படவுள்ளதோடு மூன்று வருட காலத்திற்கு 1700 ரூபா வீதம் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. இதேவேளை வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் மரமுந்திரிகைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஐரோ. நீதிமன்றில் நடக்கும் புலிகளின் வழக்கை கண்காணிக்கும் அரசு

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்ற வழக்கு ஐரோப்பிய நீதிமன்றத்தில் நடப்பது தெரிந்ததே. இவ்வழக்கு கடந்த ஏப்ரலில் தாக்கல் செய்யப்பட்டு இந்த மாதம் தான் விசாரணைகள் ஆரம்பித்துள்ளன.

இவ்வழக்கின் நிலைப்பாட்டை இலங்கை கவனமாகக் கண்காணித்து வருவதாக வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளரின் அறிக்கையிலிருந்து தெரிய வந்துள்ளது.

கடந்த 2011 ஜனவரியில் மீளவடிவமைக் கப்பட்ட பயங்கரவாதம் சம்பந்தப்பட்ட நிலை மையை அடிப்படையாகக் கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை செய்யப்பட்ட இயக் கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கம் சேர்க் கப்பட்டுள்ளது. இந்தஒழுங்குமுறையை நீதிமன்றம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று குறித்த வழக்கின் சட்டத்தரணி வாதாடி வருகிறார்.

இந்த வழக்கை புலிகளின் ஐரோப்பிய ஒன்றியம் பிரிவு சார்பாக சட்டத்தரணி கொப்பே தாக்கல் செய்துள்ளார். தாம் இதுவரை புலிகளின் ஐரோப்பிய ஒன்றிய பிரிவு என்ற ஒன்றை அறியவில்லை என்றும் இதுவே இதைப்பற்றிக் கேள்விப்படுவது முதல் தடவை என்றும் இலங்கை வெளிநாட்டு அமைச்சு கூறியுள்ளது.

மேலும் இந்தப் பட்டியலை ஒவ்வொரு வருடமும் திருப்பிப் பெயரிட வேண்டும் என்ற முடிபுக்கு சவால் விடுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் தடைசெய்யப்பட குழுக்களுக்கு இடம் கொடுக்கப்படுகிறது என்றால் கூட விடுதலைப் புலிகள் அவ்வாறு செய்வதற்கு முன்வர மாட்டார்கள். அதற்குப் பதிலாக ஐரோப்பிய நீதிமன்றில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்து ஒரு சட்டத்தரணியை வாடகைக்கு அமர்த்தி விடுவார்கள் என்று வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளாராம். (ஸ்ரீ-4)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

The Only Official French Language Centre in Jaffna

*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் French Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு மொழி பயிலும் மையமான Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

6 மாதத்தில் முதலாவது உள்ளக பரீட்சைக்கு தோற்றலாம்.

வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்....

*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*

61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093

E-mail: alliancejaffna@yahoo. com

(நக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)

மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாக பெறலாம்..

(5424)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

## 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 10


ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்,
கொழும்பு.

### பகுதி - I


☛ 01 தொடக்கம் 35 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக. 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியான விடையினைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

☛ முதலில் தரப்பட்டுள்ள உருவிற்கு நெருங்கிய தொடர்புடைய இன்னொரு உருவை எதிரேயுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.

01) 1) 2) 3)




02) 1) 2) 3)




☛ முதலாம், இரண்டாம் உருக்களின் அமைவை இனங்கண்டு, மூன்றாம் உருவுக்குப் பொருத்தமான நான்காம் உருவைத் தெரிவு செய்க.

03)



1) 2) 3)

04)




1) 2) 3)

05) தீபனின் நண்பன் கபிலன் எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடித்துவிடும் இயல்பு கொண்டவன். கபிலன் பற்றிக் கூறக் கூடிய சரியான கூற்று எது?
1) கபிலன் அவசர புத்தி உடையவன்
2) கபிலன் திட்டமிட்டபடி வேலை செய்பவன்
3) கபிலன் பொறுமையற்ற ஒருவன்


06) அன்று அந்த மேடையில் நடந்த ஒரு போட்டியில் பங்கு பற்றிய மூவரும் முதலிடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டது. இதற்கான காரணம் யாதாக இருக்கும்?
1) மூவரும் சமனான புள்ளிகளைப் பெற்றிருந்தமையால்
2) மூவரும் திறமை குறைந்தவர்கள் என்பதால்
3) மூவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தமையால்

07) தொடர்ந்து வரும் மூன்று உருக்களையும் அவதானித்து, அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.





1) 2) 3) ........ 1) 2) 3)

08) முதலாவது உருச்சோடியின் ஒற்றுமையை இனங்கண்டு, இரண்டாவது உருச்சோடியில் வினாக் குறியிடப்பட்ட (?) இடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.




1) 2) 1) 2) 3)


☛ கீழுள்ள போக்குவரத்துச் சாதனங்கள் தொடர்பான 09 ஆம் 10 ஆம் வினாக்களில் ஒவ்வொரு வினாக்களிலும் உள்ள கூற்றுக்களுடன் மிகவும் பொருத்தமுடைய உரு எதுவெனத் தெரிவு செய்க.




09) அதிக மக்கள் பயணம் செய்தல்
தொகையாக பொருட்களை எடுத்துச் செல்லல்
வெளிநாடுகளுக்குச் செல்லுதல்
1) A 2) B 3) C 4) D

10) உள்ளூர் பயணிகள் போக்குவரத்து
தரை ஊடகப் பயணம்
பொருட்களை எடுத்துச் செல்லுதல்
1) A 2) B 3) C 4) D

11) கீழே ஒரு வட்டவடிவக் கடிகாரம் செய்வதற்குத் தேவையான நான்கு அட்டைத் துண்டங்களில் மூன்றாவது துண்டம் எதுவெனத் தெரிவு செய்க.





1) 2) 3) 4)

1) 2) 3)

A - இராகவனின் இலக்கியங்களை அழுத்தினேன்
B - சிறிது நேரம் உரையாடினேன்
C - தொலைபேசியைக் கையில் எடுத்தேன்
D - பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தேன்

12) மேலுள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் ஒரு சம்பவம் கிடைக்கும். அவ்வாறுஒழுங்குபடுத்தப்பட்ட சரியான விடை எதுவெனத் தெரிவு செய்க.
1) CADB 2) CABD 3) ABCD

13) **'இராகவன் எனக்கு நன்றி கூறினான்'** எனும் வாக்கியம் மேலுள்ள வாக்கிய வரிசையில் எந்த வாக்கியத்தை தொடர்ந்து வரும் எனத் தெரிவு செய்க.
1) C யைத் தொடர்ந்து
2) B யைத் தொடர்ந்து
3) D யைத் தொடர்ந்து

14) 
அருகே உள்ள கோலம் உருவில் வெட்டி நீக்கப் பட்டுள்ள பகுதி எதுவெனத் தெரிவு செய்க.

1) 2) 3)



(14ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழிமூல கல்வி

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு முதல் முடியுமான சகல பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலம் போதிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கில மொழியை அறிமுகப்படுத்துவதில் வடக்கு -கிழக்கில் சிக்கல் நிலவிய போதிலும் தெற்கில் அவ்வாறான பிரச்சினைகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் சகல மாணவர்களும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் திட்டம் வகுக்கப்படவேண்டுமெனவும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில மொழி மூலக் கல்வி மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

மின்னேரியாவில் தலைமைத்துவப் பயிற்சி பெற்றுக் கொள்ளும் மாணவ மாணவியரை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் பல்கலைக்கழங்களை விட்டு வெளியேறும் மாணவர்கள் ஆங்கிலக் கல்வியையும் பூர்த்தி செய்தவர்களாகத் திகழ வேண்டும் என்பதே தமது நோக்கம் என அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# கல்வித்துறையை சீரழிக்கும் முயற்சிகளில் அரசாங்கம்

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

இலங்கையின் கல்வித்துறையை சீரழிக்கும் முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மலையகத்தின் ஹற்றனில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜே.வி.பி. கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கல்வித்துறையை முன்னேற்றி ஆசியாவின் கல்வித்துறை மையமாக இலங்கையை மாற்றுவதாக வாக்களித்தே கல்வித்துறை ஊழியர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டது.

ஆனால், இன்றைக்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாக கல்வித்துறை நாளுக்கு நாள் சீரழிந்து கொண்டிருக்கின்றது. பல்கலைக்கழக கல்விக்கும் அதே நிலைதான். வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து கல்வித்துறையை சீரழிக்கும் நடவடிக்கைகளையே அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இன்றைய நிலையில் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவது தவிர கல்வித்துறைக்கு அரசாங்கம் எந்தவொரு பங்களிப்பையும் வழங்குவதில்லை. அப்படியான நிலையில் கல்வியறிவு கொண்ட சமுதாயமொன்றை நம் நாட்டில் உருவாக்குவது என்பது கனவாகவே போய் விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# தரக்குறைவான பெற்றோல் இறக்குமதி குறித்து உடனடி விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

தரக்குறைவான பெற்றோல் இறக்குமதி மற்றும் விநியோகம் செய்யப்பட்டது என்ற குற்றச்சாட்டு தொடர்பில் உடனடி விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை பெற்றோல் கூட்டுத்தாபன தலைவருக்கு அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு தரக்குறைவான பெற்றோல்களை பாவித்த முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் அசைவற்று காணப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தரக்குறைவான பெற்றோல் விற்பனை செய்யப்படுவதாக சந்தேகிக்கப்படும் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் மாதிரிகளை எடுத்து பரிசோதானைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் இலங்கை பெற்றோல் கூட்டுத்தாபன தலைவருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் முறைப்பாடுகள் தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

(ஸ்ரீ-4)

# யாழிலுள்ள பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஒன்று அமுலாக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

[illegible]காப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக[illegible]வின் [illegible]காணிப்பில் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது. இதன்முதற்கட்டமாக தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இந்த வேலைத் திட்டத்துக்காக இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுவர் என்று யாழ்ப்பாண இராணுவக் கட்டளைத்தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மலைவசம்பு/ வெண்கோட்டம்

Botanical Name: Costus Specious
Family: Zinigiberaceae
Engl: cane reed
Sinh: Thebu

ஈராண்டு வாழக்கூடிய உயரமான செடி வகையைச் சார்ந்தது. தண்டு 2 தொடக்கம் 3 மீற்றர் உயரமானதும் செங்குத்தானதும் ஆகும். இலைகள் தனியிலை சுருண்டுடேறிய ஒழுங்கில் Spirally arranged 15 தொடக்கம் 30 செ.மீ நீளமுடையதாகும். நீண்ட இலைகள். இலைகளின் கீழ்ப்பக்கம் பளபளப்பாக காணப்படும். சிவப்பு/வெள்ளை நிறப்பூக்களும் தை மாதம் முதல் பங்குனி மாதம் வரையும் பின்பு ஆனிமாதத்திலும் பூக்களை அவதானிக்கலாம். பழங்கள் சிவப்பு நிறமாகவும் கறுப்பு நிறவிதைகளைக் கொண்டதாகும்.

**பரம்பலும் இனவிருத்தியும்:-**

ஈரலிப்பான நிழலான பிரதேசங்களில் வளரக் கூடியது. விதைகள் தண்டுத் துண்டங்கள் உடன் பறித்த மட்ட நிலத்தண்டு Fresh-Rhiyome மூலம் இனவிருத்தி செய்யலாம். மார்கழி மாதத்தில் விதைகளை விதைத்து 2 வருடங்களில் அறுவடை செய்யலாம்.

பொதுவாக கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் அறுவடை செய்யப்படும்.

**மருத்துவப்பயன்கள்**

✷ இதன் இலை, மட்ட நிலத்தண்டுகள் மருத்துவ குணம் மிக்கவை .

✷ இதன் இலைகளில் புளிப்புடன் கூடிய ஒருவித சுவை காணப்படும். இதன் ஒரு இலையை பிடுங்கி நன்கு கழுவி சுத்தம் செய்து வாயில் போட்டு மென்று சாப்பிட்டுவர நீரிழிவு நோயாளிக்கு இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்படும்.



✷ மலைவசம்பின் மட்டநிலத்தண்டிலிருந்து ஒரு வித நறுமணஎண்ணெய் Essential Oil பிரித்தெடுக்கப்படுகின்றது. இது கூடுதலாக வாசனை திரவியங்களிலும் அழகு சாதனப் பொருட்களிலும் சோர்க்கப்படுகின்றது. இதற்கு கிருமிகளை அழிக்கும் தன்மை உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலைவசம்பின் மட்டநிலத்தண்டில் நார்ப்பொருள் Fibre அதிகம் காணப்படுவதால் இதன் சாறு 30 தொடக்கம் 60 மில்லி அளவு பருக நன்கு மலச்சிக்கல் நீங்கும்.

வசம்பின் சாறும் மலைவசம்பின் மட்ட நிலத்தண்டின் சாறும் சம அளவு கலந்து மாறாத காயங்களிற்கு பூசி வர காயங்கள் ஆறும்.

✷ இதன் மட்டநிலத்தண்டுகளை சேகரித்து தோல் சீவி சிறு சிறு துண்டுகளாக அரிந்து 250 கிராம் மலைவசம்பிற்கு 400 மில்லி தேன் அளவு எடுக்க வேண்டும். தேனினுள் மேற்படி கீற்றுக்களாக அரிந்தமலைவசம்பை வாயகன்ற சீசாவில் போட்டு மூடி 40 நாட்கள் அப்படியே வைத்திருக்க வேண்டும். பின்னர் ஒரு தேக்கரண்டி அளவு தினமும் காலையில் வெறும் வயிற்றில் எடுத்து குடித்துவர உடலிற்கு நல்ல பலத்தை கொடுப்பதுடன் சிறந்த போசாக்கு உணவாகவும் அமையும்.

✷ குடலிலுள்ள புழுக்களை அழிப்பதில் சிறந்த நிவாரணியாகும். (Anti-Vermin)

✷ மலைவசம்பின் மட்டநிலத்தண்டு, கோரைக்கிழங்கு, வேப்பம்பட்டை ஆகியவற்றை சம அளவு எடுத்து நான்கு மடங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30 தொடக்கம் 60 மில்லி காலை மாலை அருந்த திவர காமாலை குணமாகும்.

✷ மலைவசம்பின் மட்டநிலத்தண்டிலிருந்து பிரித்தெடுக்கப்படும் Diosgenin எனும் அல்கலொயிட்டிற்கு வேதனையைக் குறைக்கும். இருதயத்தை பலப்படுத்தும். மத்திய நரம்புத் தொகுதியை மந்தப்படுத்தும் செயலாற்றல்கள் உண்டு. அத்துடன் இதில் ஈஸ்ரரோன் Coest rogenic activity செயலாற்றலும் உண்டு. பெண் மலட்டுத் தன்மைகெதிராக செயலாற்றும் தன்மையும் உண்டு.

✷ சமிபாடின்மை, வயிற்றில் ஏற்படும் கோளாறுகளிற்கு மலைவசம்பு லேகியம் சிறந்தது. வீட்டிலேயே தயாரித்து கொள்ளலாம். 1/2 லீற்றர் மலைவசம்புச்சாறு எடுத்து (மட்டநிலத்தண்டு) பசும்பாலில் அவித்த 15 கிராம் உள்ளியை நசுக்கி மலைவசம்புச் சாற்றில் போடவும். பின்பு மிளகு, சீரகம், ஓமம், வெந்தயம் ஒவ்வொன்றும் 15 கிராம் அளவு எடுத்து எல்லாவற்றையும் கழுவி காய வைத்து இடித்து அரித்து அதிமதுரம் 15 கிராம், ஏலம் 15 கிராம் ஆகியவற்றை இடித்து சேர்த்துக் கொள்ள வேண்டும். 300 மில்லி பசும்பாலில் 250 கிராம் சீனி சேர்த்து காய்ச்சி பாகுப்பதத்தில் மேற்படி பொடியை தூவி கிளறி இறக்கும் சமயம் 150 கிராம் நெய் சேர்த்து கொள்ளவும். இதில் 1 1/2 தேக்கரண்டி அளவு தினமும் இருவேளை உட்கொள்ள மேற்படி நோய்கள் தீரும்

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

குறிப்பு:- இதனை ஒவ்வொருவரும் வீட்டில் வளர்க்கக்கூடிய செடியாகும். அழகுச் செடியாகவும் மூலிகைச் செடியாகவும் காட்சிதரக்கூடியது. மேலும் விஷஜந்துக்கள், பாம்பு முதலியன இதன் தனி வாசத்திற்கு வராமல் தடுக்கக்கூடிய மூலிகையுமாகும். நிழலான ஈரலிப்பான பகுதிகளில் நன்கு வளரக்கூடியது.

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

02

## பல்வகைகள் ஒன்று சேர்தல் [Assemblage of Multiplicity]

### 19ஆம் நூற்றாண்டின் பின் ஏற்பட்ட மாற்றங்கள்

19ஆம் நூற்றாண்டு உலகில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்திய நூற்றாண்டாகும். இந்த மாற்றங்களின் தாக்கம் இலங்கையையும் பாதித்தது. ஆங்கிலேயர் வருகையும்



கலாநிதி மௌனகுரு
யாழ் பல்கலைக்கழகம்

அவர்கள் அறிமுகம் செய்த உற்பத்தி முறையும் உலகநாடுகளுடன் எம்மை இணைத்துவிட்டன. முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு, தனக்கான ஒரு சமூக அமைப்பை வேண்டி நின்றது. ஏற்றுமதிப் பொருளாதாரம், தேசியப் பொருளாதாரம், பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கிய பொருளாதாரம் என பொருளியல் அமைப்பு வளரவளர எம்நாட்டின் சமூக அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. நிலவுடமை ஆட்டங்காணத் தொடங்கியது. புதிய வகுப்புக்கள் தோற்றம் பெற்றன. புதிய வர்க்கமாக மத்தியதர வர்க்கம் உருவாகியது. இச்சமூக மாற்றம் பாரிய அரசியல் மாற்றங்களுக்கு எம்மை இட்டுச்சென்றது. ஈழத்து அரசியல் பல்வேறு போக்குகளைப் பெற்றது. இந்நாட்டில் தமிழரின் இருப்பு எவ்வகையில் அமைய வேண்டும் என்பதையும் தத்தமக்குரிய வர்க்க நலன்களையும் அரசியல் கொண்டிருந்தது. இவை அனைத்தும் சேர்ந்து பண்பாட்டிற் பல மாற்றங்களையும், போக்குகளையும் ஏற்படுத்தின. இப்போக்குகள் கலை, இலக்கிய போக்குகளையும் நிர்ணயித்தன.

### தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதர்கள்

கலை, இலக்கியத்தில் ஏற்பட்ட இப்போக்குகளையும் சிந்தனைகளையும் பல தனிமனிதர்களிடம்- ஆளுமைகளிடம் காண்கிறோம். இப்போக்குகளைப் புரிந்து கொள்ள இங்கு நான் தேர்ந்தெடுத்தோர்:

1. கோடாலிக்கண்ணப்பர்
2. ஆனந்த குமாரசாமி
3. வையமூப்பன் ஆனைக்குட்டி
4. சுவாமி விபுலானந்தர்
5. க. செல்லையா அண்ணாவியார்
6. பேராசிரியர்.சு.வித்தியானந்தன்
7. கே.டானியல்
8. பேராசிரியர்.க.கைலாசபதி
9. பேராசிரியர்.கா.சிவத்தம்பி
10. ஓவியர் மார்க்
11. பேராசிரியர்.எஸ். கிருஷ்ணராஜா

### தெரிவுக்கான காரணங்கள்

பல்வேறு ஆளுமைகளும், போக்குகளும் உள்ள தமிழ்ச் சூழலில் மேற்குறிப்பிட்ட 11 பேரின் தெரிவுகள் கீழ்வரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.



சோ. கிருஷ்ணராஜா

**19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந்தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்**

1. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரதான போக்கினை பிரதிபலிக்க வேண்டும்.

2. அறிஞர்கள் என பொதுவாக அறியப்பட்டவர்களும், பொதுவாக அறியப்படாதவர்களும் அத்தெரிவில் அடங்க வேண்டும்.

3. சமூகத்தில் உயர்நிலையினர் எனக்கருதப்படுவோரும் உயர் நிலையினர் எனக்கருதப்படாதோரும் அதனுள் அடங்கவேண்டும்.

4. நிறுவனம் சார்ந்தோரும், நிறுவனம் சாராதோரும் அதில் அடங்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்டவர்களுள் இங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு போக்கின் பிரதிபலிப்பாளர்களாகும். ஆனந்தகுமாரசாமி, சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கைலாசபதி, சிவத்தம்பி, வித்தியானந்தன், கிருஷ்ணராஜா ஆகியோர் அறிஞர் என அறியப்பட்டவர்கள். சமூகத்தின் உயர்நிலையினர். நிறுவனம் சார்ந்தவர்கள்.

கோடாலிக்கண்ணப்பர், வையமூப்பன் ஆனைக்குட்டி, டானியல், செல்லையா அண்ணாவியார், ஆகியோர் அறியப்படாதவர்கள். சமூகத்தின் உயர்நிலையினர் எனக் கருதப்படாதோர். அத்தோடு நிறுவனம் சாராதவர்கள்.

(தொடரும்)

# எமது சமூகத்தின் சமகால சவால்களும் கல்வியும்

02

**யாழ்/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை-2011**

யுத்தத்தின் நீட்சியும் இடப்பெயர்வு வாழ்க்கையும் சமுகக்கட்டமைப்புகள் சிதைந்து போவதற்கும், மனிதவளத்தின் சிறப்புத்திறனும் ஆற்றல்களும் குன்றிப் போவதற்கும் காரணமாகியுள்ளது.

சமுகத்தினதும் தனிமனிதரதும் தொழிலாண்மையும் உற்பத்தித் திறனும் மூலதனப் பெருக்கமும் வலுவிழந்துள்ளன. அச் சமூகங்கள் கட்டிவளர்த்த ஜனநாயகப் பயிற்சிகளும் விழுமியங்களும் பெறுமானங்களும் வழக்கொழிந்தும் மறக்கப்பட்டும் போயுள்ளன. இத்தகைய பலவீனமான சூழ்நிலைகள் தனிமனித நடத்தைப் பிறழ்வுகளுக்கும் சமூகவிரோத காரணிகளின் ஆக்கிரமிப்புக்கும் வாய்ப்பாகின்றன.

வடக்கு-கிழக்கு மக்களின் மீள் எழுச்சிக்கான சவால்கள்.

கண்ணியம் மிக்க அவையோரே!

எமது நாட்டின் வடக்குக்கிழக்குப் பகுதிகளுக்குள் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினது நேரடியான தாக்கத்தினால் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தினுள் வாழ்ந்த மக்கள் பாதிப்படைந்து கொண்டிருந்த சமகாலத்தில் நாட்டின் ஏனைய பகுதியிலிருந்தவர்களும் வடக்குக்கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேறி வாழ்ந்தோரும் தங்களது இருப்பையும் அபிவிருத்திகளுக்கான வாய்ப்புக்களையும் சிறப்பாகத் தக்கவைத்து மேம்படுத்திக் கொள்ள முடிந்தது. இது யுத்தப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்களுக்கும் ஏனைய மக்களுக்குமிடையில் சமூகப் பொருளாதார நிலைகளில் பல்பரிமாணங் கொண்ட இடைவெளியினை உருவாக்கியுள்ளது. இந்த இடைவெளியினைப் பாரியளவிலான முதலீட்டுப்பாய்ச்சல்கள் ஊடாகவோ அல்லது விரைவுபடுத்தப்பட்ட உட்கட்டுமானங்களின் உருவாக்கத்தினாலோ மட்டும் நிரப்பிவிட முடியாது. அத்தகைய ஒற்றை அணுகுமுறைமென் மேலும் முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்வதாகவே அமையும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

### சிதைக்கப்பட்ட சமூகப்பாதுகாப்பு வலையமைப்பு

பன்னெடுங்காலமாக தமது பூர்வீகக் குடியிருப்புக் காணிகளில் சமூகக் குழுக்களாக வாழ்ந்துவந்த மக்களைச் சுற்றி கண்ணுக்கு புலனாகாத சமூகப்பாதுகாப்பு எனும் வேலி இடப்பட்டிருந்தது. அதனுடைய நெற்றிக்கண்ணிற்கு குடும்ப முரண்பாடுகள் தொடக்கம் தனிமனித நடத்தைப் பிறழ்வுகள்வரை கட்டுப்பட்டிருந்தது. வறுமையும் துன்பமும் பட்டினியும் மகிழ்ச்சியும் கூட சமூகத்தின் பொதுப் பொருளாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. சாதீயம் தீண்டாமை போன்ற இருண்ட பக்கங்களுக்கு அப்பால் தொழிற்றிறனும் சிறப்புத்தேர்ச்சியும் அச்சமூகங்களின் முதுசமாகத் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டது.சீட்டு முறைகளும் பணச்சடங்குகளும் சமூகத்தின் பணச்சுற்றோட்டத்தையும் சேமிப்பாற்றலையும் மூலதனவாக்கத்தையும் தொழிலாக்கத் திறனையும் வளப்படுத்தின. முதியோரைக் கனம் பண்ணலும் இழையோருக்கு வழிவிடலும் உறவுக்குக் கைகொடுத்தலும் வாழ்க்கை நெறியாகியது. சமூகத்தின் கூட்டுப்பொறுப்புக் கூறும் கடப்பாடு நா நயங்காத்தலும் சமூகக் குழுக்களுக்கிடையான முரண்பாடுகளைச் சீர்செய்தன. ஆலயங்களும் ஆண்டு விழாக்களும் குடும்ப நிகழ்வுகளும் கூட்டுவாழ்க்கையின் பெருமையைப் பறைசாற்றின.

திருமதி.பிரேமாவதி செல்வின் இறேனியஸ்
மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

இவையாவும் இன்று தேவதைக் கதைகள் போன்று மாறியுள்ளன. மூன்று தசாப்தத்திற்குள் இடப்பெயர்வின் பேரால் ஓடிக்களைத்தவர்கள் தரித்து நின்றபோது அவர்கள் தங்கள் அடையாளங்களைத் தொலைத்திருந்தார்கள். குடும்பம் என்ற அலகு தனது முகவரியைப் பறிகொடுத்திருந்தது.

(தொடரும்)

# ஆனி மாத இராசி பலன்கள்




*பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி*

*பொன்னான நேரத்தை எல்லாம் பொது வாழ்விற்கென்று செலவழிக்கும் மீன இராசி நேயர்களே!*

நீங்கள் மூத்தவர்களின் வார்த்தைக்கு மதிப்பு கொடுப்பவர்கள். பிறரது துன்பத்தைக் கண்டு மனம் உருகுவீர்கள். உதவும் குணம் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும்.

நியாயமான முறையில் தான் எதையும் செயற்படுத்த வேண்டுமென்று சொல்வீர்கள்.

மதப்பற்று உங்களுக்கு அதிகமாக இருக்கும். பிறருக்கு மரியாதை செய்தால் தான் நமக்கும் மரியாதை கிடைக்கும் என்பது உங்கள் சித்தாந்தம். பெரிய மனிதர்களின் தொடர்பு அதிகம் பெற்றிருப்பவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இந்த ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சனியின் சப்தம பார்வை உங்கள் இராசியில் பதிவதால் சங்கடங்களும் சச்சரவுகளும் அதிகரிக்கலாம். எனவே எந்த முடிவு எடுத்தாலும் அதை நீங்கள் மட்டும் எடுக்காமல் குடும்ப உறுப்பினர்களையும் கலந்து ஆலோசித்து செய்வது நல்லது.

உடல் ஆரோக்கியத்திலும் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். எனவே நோய்க்கான ஆலோசனை பெறுவது நல்லது. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுது ஒரு கணம் யோசிப்பது நல்லது.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 6,8 ஆகிய இடங்களில் பதிவதால் தொழிலில் இழப்புகளை இனி ஈடுசெய்வீர்கள். மன அமைதியின்றித் தவிக்கும் உங்களுக்கு இம்மாத கடைசியில் வழிபிறக்கும். சுப விரயங்கள் செய்ய உகந்த நேரமிது. இருப்பினும் சனிப் பெயர்ச்சிக்குப பின்னால் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறப் போவதால் தொடர்ந்தே உங்களுக்கு விரய நேரம் தான் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். பெயர்ச்சியாகப் போகும் சனி குருவின் பார்வையில் சில மாதங்கள் இருப்பதால் அந்த நேரத்தில் சில நல்ல காரியங்களையும் செய்ய வைக்கும். புத்திரர் வழியில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு அகலும், இடமாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றம் ஒரு சிலருக்கு இனிமை தரும் விதத்தில் அமையும்.

இதுவரை சொந்த வீட்டில் சஞ்சரித்த புதன் கடந்த 26ஆம் திகதி முதல் கடக இராசியில் சஞ்சரிக்கிறார்.4,7 க்கு அதிபதியான புதன் 5 இல் சஞ்சரிக்கும் பொழுது நல்ல காரி யங்கள் இல்லத்தில் நடைபெறும்.புதிய முயற்சிகள் கைகூடும்.

எதிர்கால வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கும். பிரபலங்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரிங்களை முடித்துக் கொடுப்பர். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். அவர்களின் எதிர்கால கனவுகளை நனவாக்குவீர்கள்.

நாளை முதல் மிதுன இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக எதிர்பாராத விதத்தில் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

8 க்கு அதிபதியும், 6 க்கு அதிபதியும் இணைந்து சுக ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வாகன யோகம் முதல் வளர்ச்சி தரும் அனைத்து யோகங்களும் செயற்படும். பாதியில் நின்ற கட்டடப் பணியை மீதியும் தொடருவீர்கள். அரசு வழி அனுகூலங்களும், அரசியல் வாதிகளால் ஆதாயங்களும் கிடைக்கும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய நவக்கிரக வழிபாட்டினை முறையாகச் செய்யுங்கள். நவக்கிரக கவசம் பாடி, ஜோடி தீபம் ஏற்றி மாலை அணிவித்து வழிபாடு செய்யுங்கள். நவதானிய தானம் கொடுப்பதும் நல்லது. அதன் மூலம் நிதி நிலை உயரும். நிம்மதி கிடைக்கும்.

### சிவல்புரிசிங்காரம்

இம்மாதம் பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் கிடைக்கும். அருளாளர்கள் மற்றும் அருகில் இருக்கும் அனுபவஸ் தரின் ஆலோசனைப்படி நடக்க முன் வரு வீர்கள்.

கணவன்- மனைவி உறவு திருப்தி தரும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் முயற்சி உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். (முற்றும்)

**அன்பு வாசகர்களே!**
**நாளை தொடக்கம் மீண்டும் எண் சோதிடம் வெளிவரும்.** (ஆ-ர்)

## இந்திய வம்சாவளி இலங்கையர்கள் தமது பூர்வீகத்தை அறிந்து கொள்ள வசதி

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இலங்கையர்கள் தங்களது பூர்வீகத்தை அறிந்து கொள்வதற்கு புதிய வழியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்திய வெளிவிவகார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கை வம்சாவளி இலங்கையர்களின் மூதாதையர்கள், அவர்களது பிறந்த இடம் போன்ற தலைமுறைசார் தரவுகளை இந்தத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் இந்திய பூர்வீகம் தொடர்பான தரவுகளை வழங்கும் சேவை வழங்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

தரவுகளை பெற்றுக் கொள்ள விரும்பும் நபர்கள்இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

http:/moia.gov.in என்ற இணைய தளத்தின் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக 72 ஆயிரத்து 480 ரூபா பணம் செலுத்த வேண்டும் எனவும் தரவுகளை தேட முடியாத பட்சத்தில் 48 ஆயிரத்து 320 ரூபா மீள அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

## சர்வதேச நீதிமன்ற தலைவரும் ஜனாதிபதி மஹிந்தவும் சந்திப்பு

சர்வதேச நீதி மன்றத்தின் தலைவர் ஹிஷாசி ஒவாடா மற்றும் அவரது மனைவி ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துள்ளனர்.

இலங்கை புதியதொரு யுகத்திற்கு பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் ஆசிய ,ஆபிரிக்க சட்ட மன்றத்தின் 50 ஆவது வருடாந்த மாநாட்டை நடத்துவது இலங்கைக்கு கிடைத்த பாரிய வெற்றியென சர்வதேச நீதிமன்றத்தின் தலைவர் இச்சந்திப்பின் தெரிவித்துள்ளார்.

இதன் போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட வேளையில் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

இந் சந்திப்பின் போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குனியோ டகஹஷி ஆகியோர் உடனிருந்தனர். (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரையும் முத்தமிழ் பாலர் பாடசாலையிலும் காலை 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை மீனாட்சி அம்மன் வீதியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை சந்தை முன்குடியிருப்பு வைத்தியசாலை வீதியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கொட்டி நமசிவாயம் பாடசாலை முன்பாகவும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பதை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## சட்டவிரோத ஆட்கடத்தல்களை கட்டுப்படுத்துவதில் இலங்கை ஆர்வம்

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதில் இலங்கை ஆர்வம் காட்டி வருவதாக ஆட்கடத்தல் தொடர்பான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் தொடர்பிலான சகல நியதிகளையும் இலங்கை பின்பற்றாத போதிலும் கடத்தல்களை கட்டுப்படுத்த தீவிர ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல்களை தடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளும் நாடுகளின் வரிசையில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் தொடர்பாக 2000 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரகடனத்தில் இன்னமும் இலங்கை கைச்சாத்திடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சிறுவர்கள் மற்றும் பெண்களை சட்டவிரோதமான முறையில் நாடுகளுக்கு கடத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இந்த பிரகடனம் உருவாக்கப்பட்டது.

சட்ட விரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படுவதில்லை எனவும் ஆட்கடத்தல் தொடர்பான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகள் அறிவிக்கப்பட வேண்டியது அவசியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ-2)

## மலேசிய எதிர்க்கட்சிக்குழு இலங்கை விஜயம்


மலேசியாவின் எதிர்க்கட்சி நாடாளுமன்ற குழு ஒன்று இலங்கை வரவுள்ளதாக மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சிவராசா தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம், துரித இயல்பு வாழ்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து மலேசிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற குழு ஒன்று இலங்கையிடம் மனு ஒன்றை கையளித்தது.

இந்த மனு தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் பதிலைத் தொடர்ந்து அந்த குழு இலங்கை வரும் என அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)



மாவட்ட மட்டத்தில் 15 வயது பிரிவினரிடையே நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவான கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலய வீராங்கனைகளையும் அதிபர், பிரதி அதிபர், உடற்கல்வி ஆசிரியர் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்:-வட்டக்கச்சி செய்தியாளர்.)





யா/வயாவிளான் மத்தியமகா வித்தியால வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 25 ஆம் திகதி ஆ.சி.நடராசா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் மங்களவிளக்கேற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருமதி அனுஷ்கா சத்தியசீலன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குதையும் மாணவிகளின் இசை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்: - (புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை

## உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கிலப்பன் பேர்க் இராணுவ கல்லூரியில் தலைமைத்துவ பயிற்சி பெறும் மாணவர்கள் சிலரை சந்தித்த போதே, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இதனை குறிப்பிட்டார்.

பகிடிவதை மாணவர்களுக்கு உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் மாணவர்கள் அனைத்து விடயங்களிலும் பின்னடைவை எதிர் நோக்கும் ஒரு நிலைமை இதன் மூலம் உருவாக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் கடந்த வரும் பகிடிவதை 80 வீதமாக குறைந்துள்ளதாகவும் இம்முறை அதனை 100 வீதமாக குறைப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பொதுநலவாய போட்டிகள் திட்டத்திற்கு சனல் 4 வீடியோ தாக்கத்தை ஏற்படுத்தாது

## அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக பிரிட்டனின் சனல் 4 அலைவரிசையினால் ஒளிபரப்பப்பட்ட ஆவணப்படமானது 2018ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டையில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் முயற்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தமாட்டாது என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அந்த ஆவணப்படத்திற்கு புலம் பெயர்ந்த மக்கள்தான் பொறுப்பே என்பது தெரிந்த விடயம். அது அப்படம் உண்மையானதல்ல. அது அம்பாந்தோட்டையில் பொதுநலவாய போட்டிகளை நடத்தும் திட்டத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்த மாட்டாது என அவர் கூறினார். தெற்காசியாவுக்கான பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அமைச்சர் அலிஸ்டர் பர்ட், சனல் 4 படத்தை பார்த்து தான் அதிர்ச்சியடைந்ததாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் 4 நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கைக்கு வந்த பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தின் மதிப்பீட்டுக்குழு, இது வரை பார்த்தவை குறித்து திருப்தி கொண்டுள்ளதாக அமைச்சர் அளுத்கமகே தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சோமாலிய கடற்பரப்பில் மீன்பிடிக்க இலங்கை மீனவருக்கு சந்தர்ப்பம்

சோமாலிய கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இலங்கை மீனவர்களுக்கு சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இது தொடர்பில் சோமாலிய அரசாங்கத்தினால் கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக சீனோர் அமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளர் உதித் அனுராத தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு வருகை தந்த சோமாலிய அரசாங்கத்தின் விசேட பிரதிநிதி ஒருவர் இது தொடர்பில் கலந்துரையாடியதாக குறிப்பிட்டார்.

சோமாலியகடற்பரப்பில்இலங்கை மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சோமாலிய படகுகளை பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மீனவர்களினால் பிடிக்கப்படும் மீன்களை சோமாலிய நாட்டிற்கு வழங்கிய பின்னர் அவற்றுள் எஞ்சிய மீன்களை நாட்டிற்கு கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் முற்கட்ட பேச்சுவார்த்தைகளே இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோரின் அடைவு மட்டம் வீழ்ச்சி

## ஆய்வில் தகவல்

கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோரின் அடைவு மட்டம் உரிய அளவை விட குறைவாகவுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தின் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவர்களில் 42 சதவீதமானவர்கள் தரம் 3இல் கல்வி கற்கும் தகுதியையே கொண்டுள்ளனர் என இதன் மூலம் தெரிய வந்துள்ளது.

இதேபோன்று, தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர்களில் 35 சதவீதமானவர்கள் தரம் 4 இல் கல்வி கற்கும் தகுதியிலேயே உள்ளனர்.

துரித கற்றல் என்ற புதிய செயற்பாட்டின் ஊடாக இந்த மாணவர்களின் அடைவு மட்டத்தை ஒரு வருட காலத்திற்குள் அதிகரிக்க கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் தீர்மானித்துள்ளது என உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் மேலதிகமாகவுள்ள 3 ஆயிரத்து 118 ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்டோருக்கு விசேடமாக பயிற்சிகளை வழங்கி, அடைவு மட்டம் குறைந்த மாணவர்களுக்கான துரித கற்பித்தல் செயற்பாட்டில் இணைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

துரித கற்பித்தல் செயற்பாட்டில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை இணைத்து கொள்வதன் மூலம் மேலதிக ஆசிரியர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என அவர் கூறினார்.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் துரித கற்பித்தல் செயற்பாடு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக குறிப்பிட்ட உயர் அதிகாரி, மாணவர்களின் உளவள ரீதியாக பாதிக்காத வகையிலேயே இது இடம்பெறும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

2011.06 29

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1534-பிரின்ஸ் எட்வேர்ட் தீவு ஜாக் கார்டியர் என்ற ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1613- லண்டனில் உள்ள குளோப் நாடக மாளிகை தீயில் எரிந்து அழிந்தது.

★ 1786-அலெக்சாண்டர் மாக்டொனெல் மற்றும் 500 கத்தோலிக்கர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து சென்று ஒண்டாரியோவின் கிளென்கரி என்ற ஊரில் குடியேறினர்.

★ 1814-மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப்பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.

★ 1850-வான்கூவர் தீவில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1864-கனடாவில் கியூபெக்கில் தொடரூந்து விபத்தில் 99 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1880-பிரான்ஸ் டெஹீட்டி தீவைக் கைப்பற்றியது

★ 1904-மொஸ்கோவில் இடம்பெற்ற சூறாவளியினால் சுமார் ஆயிரத்து 500 வீடுகள் , கட்டடங்கள் அழிந்தன.

★ 1914-கிரிகோரி ரஸ்புட்டீன் சைபீரியா நகரில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் தப்பினார்.

★ 1925-கலிபோர்னியாவில் 6.3 நிலநடுக்கம் ஏற்பட்டதில் சாண்டா பார்பரா என்ற இடம் முற்றாக அழிந்தது.

★ 1976-சிஷெல்ஸ் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1995-அட்லாண்டிஸ் விண்ணோடம் ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்துடன் முதற்தடவையாக இணைந்தது.

★ 1995-தென் கொரியாவின் சியோலில் சம்பூங் பல்பொருள் அங்காடி இடிந்து வீழ்ந்ததில் 501 பேர் கொல்லப்பட்டு 937 பேர் படுகாயமடைந்தனர்.

★ 2002 தென்கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் இடம்பெற்ற கடல் மோதலில் ஆறு தென்கொரிய மாலுமிகள் கொல்லப்பட்டு ஒரு வட கொரியக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

## பிறப்புகள்

★ 1945-சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் நான்காவது ஜனாதிபதி.

★ 1981-ஜோ ஜான்சன், அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்பு

★ 2009-வ.ஐ.சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (பி.1926)

## சிறப்புநாள்

★ செஷெல் சுதந்திர தினம் (1976)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



ஆன்மீகம் 35

"ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் கல்வியறிவு பெறும் வரையிலும், நம் தேசத்தில் குடும்பங்கள் உடையாமல் இருந்தன. கல்வியறிவு தந்த ஆணவம் பெண்களை இன்று விவாகரத்துகளில் தானே கொண்டு விட்டிருக்கிறது?"

இன்றைக்குக் கணவனும் மனைவியும் சேர்த்து வாழ்ந்தாலே கூட்டுக் குடும்பம் என்றாகிவிட்டது. என்று ஒரு நண்பர் சொன்னார். உண்மைதான் இன்றைக்குக் குடும்பங்கள் சிதறிவிட்டன. ஆனால், அது பெண்களுக்கு கல்வி கொடுக்கப்பட்டதால் அல்ல; ஆண்களுக்கு கொடுக்கப்பட்ட கல்வியும் அதற்கொரு காரணம்.

நம் தேசத்தில் முன்பு வழிவழியாக கற்பிக்கப்பட்டது. எந்த ஒரு தனிநபரையும் உருவாக்குவதோடு நின்றுவிடவில்லை; அவரோடு சேர்ந்திருப்பவரையும் சேர்த்து முன்னேற்றுவதற்கான கல்வியாக அது அமைந்திருந்தது. மற்றவரையும் தன்னைப்போல் உணரும் மனப்பக்குவத்தை அது வழங்கி வந்தது.

ஆனால் ஆங்கில ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்ட கல்வி நாம் என்று சொல்வதை மறக்கச் செய்து, நான் என்று எண்ணச் செய்துவிட்டது. "நான் எனது என்று மட்டுமே பார்க்கும் கல்வி திருமண உறவுக்கு என்றைக்குமே உகந்ததல்ல!

ஆண்களுக்கு மட்டும் அக்கல்வி கிடைத்து வந்தவரை குடும்பங்கள் சந்தோஷமாக இருந்தன. என்று முடிவு செய்துவிட முடியாது. பெரும்பாலான பெண்கள் ஆண்களைப் பொறுத்துக் கொண்டு இருந்தார்கள் என்பதே உண்மை. பல இல்லங்களில் சட்டபூர்வமாக மணமுறிவுகள் இல்லையே தவிர உணர்வுபூர்வமாகமான மனமுறிவுகள் நிகழ்ந்து கொண்டுதான் இருந்தன. நொறுங்கிப்போன பல பெண்கள் நான்கு சுவர்களுக்கு உள்ளேயே அடைந்து கிடந்ததால், விரிசல்கள் வெளிப்படையாக வெளியுலகுக்கு தெரியவில்லை. வெளியே சொல்லாதவை என்பதாலேயே வேதனைகள் மேன்மையுற்று விடுவதில்லை.

இரகசியமாக வலியைப் பொறுத்துக் கொள்வதைவிட அவற்றைப் பொதுவுக்கு கொண்டு வந்து தீர்த்துக்கொள்வது மேல்.

## எது உண்மையான கல்வி ?

பெண்களுக்கு கல்வி கொடுத்ததால் அவர்கள் விழித்துக் கொண்டார்களே என்று பதறுவதில் நியாயம் இல்லை.

பொருளாதார ரீதியாகப் பெண்கள் தங்கள் சொந்தக் கால்களில் நிற்கத் துணிந்தபின் ஆண்களிடம் அடங்கிக் கிடப்பதற்கான அவசியம் அற்றுப்போனது.

உண்மையான கல்வி என்பது ஆண், பெண் என்று பாகுபாடுகள் பார்க்கக்கூடாது. இருபாலாரையும் மேம்படுத்தும் அளவுக்கு அது பொதுவானதாக இருக்கவேண்டும் அடுத்தவரை விலக்கிப் பார்ப்பதற்கான கல்வியாக மட்டும் அது அமைந்துவிடுமானால் குடும்பங்கள் என்ன உறவுகளும் சமூகங்களும்கூட சிதறிப்போகும்.

**"இன்றைய கல்வி முறையில் அப்படி என்ன குறை இருக்கிறது. என்று நினைக்கிறீர்கள்?"**

இன்றைய கல்விமுறையின் நோக்கமே, இருப்பதையெல்லாம் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது எப்படி என்பது பற்றித்தான் இருக்கிறது.

ஒரு இலையைப்பார்த்தால்கூட அதிலிருந்து தனக்கு ஏதாவது கிடைக்குமா என்று சுயநலத்தோடு பார்க்கும் மனப்பான்மை மனிதனுக்கு வந்துவிட்டது. மரம், காற்று, பூமிக்கடியில் புதைந்துள்ள இயற்கைச் செல்வம் என்று எதையும் அவன் விட்டுவைக்கவில்லை.

எறும்புக்கு ஓர் உலகம் உண்டு. யானைக்கு ஓர் உலகம் உண்டு. ஒவ்வொரு உயிரினத்துக்கும் அதனதன் உலகம் உண்டு. இயற்கையைப் பொறுத்தவரை மனிதனும் மற்ற உயிரினங்களைப் போல ஓர் உயிரினம் தான்.

ஆனால் மனிதன் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் தெரியுமா?

ஒருகாகம் ஒரு பட்டாம்பூச்சி ஒரு மனிதன் மூவரும் ஒரே நேரத்தில் இறந்து போயினர் மேல் உலகை அடைந்து படைத்தவன் முன் நின்றனர்.

கடவுள் பட்டாம் பூச்சியிடம் கேட்டார்... "உனக்கு எங்கே இடம் வேண்டும்?"

"பூமியில் பல மகரந்தச் சேர்க்கைகளுக்கு நான் உதவினேன் எனக்கு சொர்க்கம் கிடைத்தால் சந்தோசம்!" என்றது பட்டாம்பூச்சி.

"உனக்கு?" என்றார் காகத்திடம்.

"பலவிதைகளை நான் வெவ்வேறு இடங்களில் துப்பியதால்தான் காடுகள் வளர்ந்து பெருகின இயற்கைக்கு உதவிய எனக்கும் சொர்க்கத்தில் இடம் வேண்டும்" என்றது காகம்.

மனிதனின் பக்கம் திரும்பினார் கடவுள் "உனக்கு எங்கே இடம் வேண்டும்?"

"ஹலோ நீங்கள் உட்கார்ந்திருப்பது என் நாற்காலி. எழுந்திருங்கள்" என்றான் மனிதன்.

கடவுள் தன் வடிவத்தில் இருப்பதாக மனிதன் கற்பனை செய்துகொண்டு இருப்பதால் அவனுக்கு அளவற்ற அகம்பாவம்.

மற்றஜீவராசிகளைத் தாண்டிய திறன் கொண்டிருப்பதால் தன்னைக் கடவுளாகவே அவன் நினைத்துக் கொண்டு விட்டான். தன்நலன் பற்றி மட்டுமே சிந்தித்து, தனக்குச் சரிவராத எல்லாவற்றையும் இவ்வுலகில் இருந்தே அழிக்க முனைந்து விட்டான்.

இதற்குத் துணை போவதுபோல் அமைந்திருப்பதே இன்றைய கல்வியின் பெரும் குறை. இது அனைவரிடமிருந்தும் மனிதனைப் பிரித்து தனித்து நிற்கக் கற்பித்துக் கொண்டிருக்கிறது.

அடுத்தவர் மூலம் தனக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்றுமட்டுமே சொல்லிக் கொடுப்பது நல்ல கல்வி அல்ல. கல்வி என்பது மற்றவரை உங்களில் ஒருவராகப் பார்ப்பதற்கும் சொல்லித் தரவேண்டும். அப்படிப்பட்ட கல்வி அனைவருக்கும் கிடைத்துவிட்டால் மனித உறவுகள் அமுதமாய் மேம்பட்டுவிடும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# புலம்பெயர் தமிழரின் பண்பாட்டு அசைவியக்கத்தில் கனேடிய இலக்கிய இதழ்களின் பங்கு

07

தொகுநிலை நோக்கும்....

தமிழ்நாடு உட்பட ஏனைய நாடுகளில் வாழும் தமிழினத்தவருக்கிடையே இணைப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. வெவ்றே நாடுகளில் பிரிந்து, பரந்து வாழ்ந்து வருபவர்களது முகங்களைத் தரிசிக்கவும் அடையாளம் காணவும் உதவியிருக்கின்றன. தமிழ் இலக்கியப் பரப்பில் புலம்பெயர் இலக்கியம் ஒரு புதிய காலடி என்பதை அவை நிறுவி உதவியுள்ளன. புதிய திணைகளும் புதிய சொற்களும் புதியபரப்பும் புதியவீச்சும் கொண்ட புலம்பெயர் இலக்கியத்தில் பனிவயல்களும், பனிப்பொழிவுகளும் மேப்பிள் மரங்களும், ஒன்ராறியோ வாவியும், டொன்வெலிப் பாலமும் பின்புலங்களாகவும் படிமங்களாகவும் குறியீடுகளாகவும் இடம் பெற்றிருந்தன.

இவ்வாறாக புலம்பெயர் இலக்கியம் முன்னர் அறியப்படாத தளங்களையும் அனுபவங்களையும் இனங்காட்டி இருக்கின்றன. இந்தப்புலம்பெயர் இலக்கியங்கள் ஊடாக நவீன தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ் பண்பாட்டிற்கும் அணிசேர்க்கும் பணியில் கனடிய இலக்கிய இதழ்கள் ஆற்றிய பங்கு புறக்கணிக்கப்படக் கூடியதல்ல. புலம்பெயர் இலக்கியங்கள் ஊடாக கனடிய தமிழ்மக்கள் தமது அடையாளத்தைப் பேணிப்பாதுகாத்துக் கொள்வதில் ஒரு கணிசமான பங்களிப்பை இந்த இலக்கிய இதழ்கள் வழங்கியுள்ளன. இதனை உறுதி செய்யும் வகையில் - "புலம்பெயர் தமிழர்கள் விதைக்கும் புதிய கலை இலக்கியச் செயற்பாடுகள் உத்வேகம் மிக்கவை. ஆதாரமானவை. பல இன்னல்களுக்கிடையிலும் இதழ் நடத்தவது, விநியோகிப்பது, தொடர்புகொள்வது என்பது சாதாரண விடயமல்ல; இது வணங்குவதற்குரியது" எனத் தமிழகத்து "சிற்றிதழ்செய்தி" என்ற சிறு சஞ்சிகையின் ஆசிரியர் பொள்ளாச்சி நசன் அவர்கள் 1994 ஏப்ரில் 26ஆம் திகதி தமது கைப்பட எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவற்றின் அடிப்படையில் தமிழ்ப்பண்பாட்டின் செழுமையான முன்நோக்கிய அசைவுக்கு பயன்தரும் வகையிலும், வளம் சோர்க்கும் வகையிலும் கனடிய தமிழ் இலக்கிய இதழ்களை எவ்வாறு மென்மேலும் ஆற்றுப்படுத்தலாம்? என்ற கேள்வி ஒன்று

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

இப்போது எழுப்பப்படுகின்றது. அதேவேளை சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கிடையில் வெளிவந்திருக்கும புலம்பெயர் இலக்கியங்களையும், புலம்பெயர் இலக்கிய இதழ்களையும் கூர்ந்து அவதானிக்கையில், தமிழ் இலக்கியத்திற்கு புலம்பெயர்ந்தோர் இலக்கியமே தலைமை தாங்குமா? என்ற இன்னொரு கேள்வியும் ஏககாலத்தில் எழுப்பப்படுகின்றது.

"தமிழ்மொழியின் வளர்ச்சி என்பது அதனுடைய கலைகளினதும் இலக்கியங்களினதும் மொழிப்பாவனையினதும் வளர்ச்சி தான்" என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதோர் உண்மை. இந்த வளர்சிக்குத் தமிழ்ச் சஞ்சிகைகள் கைகொடுத்து உதவக்கூடியன என்பதும் உண்மையே. ஆனால் புலம்பெயர்ந்த மக்களிடமிருந்து முதலில் தொலைந்து போவது மொழியென்பது ஆராய்ச்சிகளின் முடிவு. அதன் வழியாக மொழிசார்ந்த பண்பாடு வழக்கொழிந்து போவதும் தவிர்க்க முடியாதது. இதற்கமைய கனடாவில் ஆங்கிலத்தில் மட்டுமே பரிச்சயமான ஒரு தலைமுறை ஏற்கனவே உருவாகிவிட்ட நிலையில், தமிழ் இலக்கிய இதழ்களின் எதிர்காலமும் நிச்சயமற்றதாகவே காணப்படுகின்றது. அதன்விளைவாக தமிழ் இலக்கிய இதழ்களின் எதிர்காலமும் நிச்சயமற்றதாகிவிட்ட நிலையில், ஒரேஒரு நம்பிக்கை மட்டும் இன்னமும் எங்கோ ஒரு மூலையிலிருந்து "பனிப்பாறையைப்பிளந்து, துளிர்விடும் செடியாக" தலை காட்டுகிறது. அதாவது "புலம்பெயர்ந்தோர் இலக்கியம் இன்னொரு தளத்திலோ அல்லது இன்னொரு வடிவத்திலோ தன் வரவுக்காக இன்னமும் காத்திருக்கின்றது" என்ற நம்பிக்கையூட்டும் செய்தியை 'கூர்' என்ற கலை இலக்கிய இதழ்களில் கனடாவாழ் புதிய இளந்தலைமுறையினர் எழுதி, தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்கும் ஆக்கங்கள் சொல்லி வைத்திருக்கின்றன. அப்புதிய தளமோ அல்லது வடிவமோ, நிச்சயம் தமிழில் அமையப் போவதில்லை என்ற செய்தியையும் அவை கூடவே பூடகமாகச்சொல்லி வைத்திருக்கின்றன! கனடிய தமிழ் இலக்கியத்திற்கு மட்டுமன்றி கனடிய தமிழ் இலக்கிய சஞ்சிகைகளுக்கும் சேர்ந்தேதான் இந்தச் செய்தியை அவை சொல்லி வைத்திருக்கின்றன!

இந்த நிலையில் "தற்கொலைகளில் எல்லாம் மிகவும் விலைஉயர்ந்த தற்கொலை பத்திரிகைத் துறையில்தான் இடம் பெற்று வந்திருக்கின்றது" என்ற கசப்பான உண்மையை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டும், கடந்த இருபது வருடங்களாக காலம் இதழை வெளியிட்டு, நீறுபூத்த நெருப்புக்குள் தொடர்ந்து நின்று நிலைத்து, இலக்கியப்பணி செய்து கொண்டிருக்கின்றார், அதன் ஆசிரியர் செல்வம். அண்மையில் இந்தத் தீக்குளிப்பு முயற்சியில் மீண்டும் துணிந்து கால்பதித்திருக்கின்றார். 'கூர்' கலை இலக்கியத்தொகுப்பின் ஆசிரியர் தேவகாந்தன். இவ்விருவரதும் அசாத்தியத் துணிச்சலைக்கண்டு ஆச்சரியப் படாதிருக்க முடியவில்லை!

**க.நவம்-கனடா**


(முற்றும்)

# ஆண்களின் உடலில் காணப்படும் அதிர்ஷ்டகரமான மச்சங்கள்

*உள்ளங்காலில் மச்சம்-* வெளியூர்ப்பயணம், மிகவும் புகழ் பெறுவர். கவி பாடும் திறன், இசைக்கலை சிறப்பு, பட்டம் பதவிகள் உண்டு.

*கால் கட்டை விரலுக்கு கீழே மச்சம்-* பிறர் உதவி தானாகவே கிடைக்கும்.

*வலது பாதத்தில் வலது புறத்தில்*



*மச்சம்-* தெய்வ திருத்தலங்களையும் புண்ணிய நதிகளையும் தரிசித்தல்.

*வலது பாதத்தில் மச்சம்-* சிறப்பான வாழ்க்கை.

*வலது முழங்காலில் மச்சம்-* பிறவியிலேயே அதிர்ஷ்டசாலி, எதிலும் வெற்றி, எல்லா வகையிலும் நல்ல பலன்கள்.

*வலது தொடையில் மச்சம்-* தொழில் மூலம், மனைவி மூலம் மிகுந்த தன இலாபம், வெளிநாட்டுப் பயணம்.

*விரைகளின் வலது புறத்தில் மச்சம்-*ஆண்குழந்தைகள் அதிகம்.

*விரைகளின் இடது புறத்தில் மச்சம்-* பெண் குழந்தைகள் அதிகம்.

*விரைகளின் மேல்ப்பாகத்தில் மச்சம்-*வாகன வசதிகள், சுகமான வாழ்க்கை, செல்வப் பெருக்கு.

*தொப்புளுக்கு கீழே மச்சம்-* பல வகையில் பணம் ஈட்டல்

*வலது அக்குளில் மச்சம்-*பிறவியிலேயே செல்வச் சீமான், மனைவியால் வாழ்க்கை இனிக்கும், பிறர் பாராட்டல்.

*முதுகில் மச்சம்-*வாழ்க்கைக்குரிய சகல வசதிகள், தெய்வ பக்தி, சிறந்த அறிவாளி.

*முதுகில் வலது தோளுக்கு அருகில் மச்சம்-* உடல் வலிமை மிக்கவர், சண்டையிடுவதில் வல்லவர்.

*முதுகில் முதுகெலும்பின் அருகில் மச்சம்-*அரசாங்க அதிகாரி, பதவி உயர்வு.

*முதுகெலும்பின் அடிப்பாகத்தில் மச்சம்-* நீண்ட ஆயுள், உடல் ஆரோக்கியம்.

*தோளில் மச்சம்-* வாழ்க்கை வசதிகள் அனைத்தும் உண்டு. சுகபோகங்கள் உண்டு.

*கழுத்தின் மேல் பாகத்தில் மச்சம்-* பிறரை கவரும் ஆற்றல்.

*நெஞ்சில் மச்சம்-*திருமணத்திற்குப் பின் சொத்துக்கள் அதிகம், மனைவி மூலம் அதிக தன இலாபம்.

*நெஞ்சின் வலது பாகத்தில் மச்சம்-* பொது நலத்திற்காக பணிபுரியும் தியாக மனப்பான்மை.

*நெஞ்சின் இடது பாகத்தில் மச்சம்-* வாழ்க்கை வசதிகள் உண்டு, பிறருடைய பாராட்டுகள் உண்டு.

*நெஞ்சுக்கு கீழே மச்சம்-* மனைவியால் வாழ்க்கை செம்மை, மனைவியால் தன இலாபம்.

*மோவாய்க்கட்டில் நடுவில் மச்சம்-* சகல வசதிகளும் உண்டு. தர்ம நெறி தவறாதவன்.

*நாக்கில் மச்சம்-* கலைகள் உணர்ந்த சிறந்த அறிவாளி, உயர்ந்த பேச்சாளி.

*நாக்கின் அடியில் மச்சம்-* பற்றற்ற துறவி,சித்தி பெற்ற யோகி.

*மூக்கின் வலது புறத்தில் மச்சம்-* பெரும் பாக்கியசாலி, செல்வங்கள் சேரும்.

## ஜோதிடக் களம்

*வலது கண்ணில் மச்சம்-* சகல வசதிகள், சுக போகங்கள், ஆனந்த மயமான வாழ்க்கை, தெய்வ பக்தி.

*இரண்டு காதுகளின் மீதும் மச்சம்-* செல்வக் குடும்பப் பிறப்பு, மேலும் மேலும் செல்வப் பெருக்கு பெரும் பாக்கியசாலி.

*காதுகளின் பின்புறத்தில் மச்சம்-* சகல வாழ்க்கை வசதிகள், அழகும் செல்வமும் மிக்க மனைவி, நீண்ட ஆயுள்.

*வலது புருவத்தில் மச்சம்-* அதிகமான வருமானம்

*நெற்றியில் மச்சம்-* வாழ்க்கையில் பல விதத்திலும் மகிழ்ச்சி.

*நெற்றியின் வலது புறத்தில் மச்சம்-* பெரும் புகழ், எதிர்பாராத தன இலாபங்கள்.

*பொறியில் மச்சம்-* எதிர்பாராத தன இலாபம், வியாபாரத்தில் இலாபம்.

*தலையில் வலது பக்கத்தில் மச்சம்-* அதிகார பதவி.

*ஆட்காட்டி விரலில் அல்லது நகத்தில் வெள்ளை மச்சம்-* எதிர்பாராத தனஇலாபம், பட்டம் பதவி உயர்வு.

*சுட்டுவிரலில் மச்சம்-* எடுத்த காரியத்தில் வெற்றி.

### தொழில் வகை மச்சங்கள்

*வலது தொடையில் மச்சம்-* துணி வியாபாரம், தொழில் இலாபம்.

*உள்ளங்காலின் நடுவில் மச்சம்-* பாட்டுக்கள் புனைதல், பாடகர் தொழில்.

*முதுகில் முதுகெலும்பின் அருகில் மச்சம்-* அரசாங்க அலுவலர்.

*கீழ் உதட்டின் மீது மச்சம்-* பிரசங்கம் செய்தல்.

*நாக்கின் மீது மச்சம்-* பிரசங்கம் செய்தல்.

*மூக்கின் வலது புறத்தில் மச்சம்-* வியாபாரம்.

*பொறியில் மச்சம்-* வியாபாரத்தில் இலாபம்.

*நடுவிரலில் வெள்ளைநிற மச்சம்-* சிறப்பாக வியாபாரம் செய்தல்.

*மோதிர விரலில் நகத்தில் வெள்ளை மச்சம்-*செய்தொழிலில் நல்ல இலாபம்.

*சுண்டு விரலில் மச்சம்-*வியாபார முன்னேற்றம்.

(தொடரும்)

# வடமாகாண தமிழ்த்தினப் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தமிழ்த்தினப் போட்டி முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**இசையும் அசைவும்**

பிரிவு-1

உ.சுதர்சனா (ஏழாலை தெற்கு அ.மி), இ. கிருசிகா (சித்திவிநாயகர் இ.க), அ. சண் முகப்பிரியா (அனிச்சன்குளம் தமிழ் வித்தி,

பிரிவு-3

ஜெ. லாவண்யா (வட. மத்திய மகளிர் கல்லூரி), வி. நோயலின் குரூஸ் (புனித ஆனாள் ம.ம.வி), நா. விதுர்சன் (உருத்திரபுரம் ம.வி),

பிரிவு-4

சு.லுமிந்தன் (தமிழ் மத்திய மகா வித்தி, சோ. ரஜிந்ராஜ் (ஹாட்லிக் கல்லூரி), வி. ஆன் கிறிசோலினி (நானாட்டான் ம.வி),

பிரிவு-5

ப. கௌசிகன் (ஹாட்லிக் கல்லூரி), ஞா. வசந் ( தமிழ் மத்திய மகா வித்தி ), மு.பார்த்தீபா (சித்தி விநாயகர் இ.க)

**இசைகுழு -குழு 2**

இறம்பைக்குளம் ம.ம.வி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,புனித சவேரியார் பெண்கள் தே.பா

**நடனம் தனி**

பிரிவு-2

ப.கஜேந்தினி (கொக்குவில் இந்துக் கல்லூரி),அ.நிவேதிகா (தமிழ் மத்திய மகா வித்தியாலயம்),சி.வினுஜா (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

பிரிவு-3

ஜெ.சுபானுஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி),இ.அபராஜிதா (சைவப்பிரகாச மகளிர் ம.வி),ம.மிருணிஷா (புனித தெரேசா பெண்கள் கல்லூரி)

பிரிவு-4

வ.ஸ்ரீதரா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),ஜே.ஜென்சி (கிளிநொச்சி மத் திய கல்லூரி),ப.தர்மிகா (தமிழ் மத்திய மகா வித்தி

பிரிவு-5

வி.வானதி (இணுவில் மத்திய கல்லூரி), யோ.சர்மினி (தமிழ் மத்திய மகா வித்தியாலயம் ),இ.அனுஷ்கா (கிளிநொச்சி மத்திய கல்லூரி )

**நடனம் குழு- குழு 1**

இறம்பைக்குளம் ம.ம.வி,உடுவில் மகளிர் கல்லூரி, ஜெயபுரம் ம.வி

**நாட்டிய நாடகம்**

**திறந்த போட்டி**

இணுவில் மத்திய கல்லூரி,தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வற்றாப்பளை ம.வி

**நாட்டார் பாடல்**

**திறந்தபோட்டி**

கள்ளப்பாடு அ.த.க.பா, புனித லூசியா ம.வி,தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

**மேடை நாடகம்**

**திறந்தபோட்டி**

விபுலானந்தாக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி.

**வில்லுப்பாட்டு**

**திறந்தபோட்டி**

சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, கலைமகள் வித்தி, யாழ்.இந்துக் கல்லூரி

**விவாதம்**

**திறந்த போட்டி**

யாழ்.இந்துக் கல்லூரி, சித்திவிநாயகர் இ.க,தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

**தமிழறிவு வினாவிடை**

**திறந்த போட்டி**

விக்னேஸ்வராக் கல்லூரி, திருவை யாறு ம.வி, சைவப்பிரகாச மகளிர் ம.வி

**முஸ்லிம் நிகழ்ச்சி**

**திறந்த போட்டி**

தமிழ் மத்திய மகா வித்தியாலயம், ஒஸ்மானியா கல்லூரி, புத்தளம் றிசாட் பதியுதீன் ம.வி

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி**

விசேட பிரிவு 1

அங்கரா சுபோதினி (மடுகந்த ம.வி)

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி**

விசேட பிரிவு 2

தாரிகா மிகிரங்கனீ (மடுகந்த ம.வி)

**நாட்டுக்கூத்து- சிந்து நடை**

**திறந்த போட்டி**

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி, பெரிய கோம ரசன் குளம் ம.வி

**நாட்டுக்கூத்து- இசை நாடகம்**

**திறந்த போட்டி**

கிளிநொச்சி ம.வி,சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி

**நாட்டுக்கூத்து- தென்மோடி**

**திறந்த போட்டி**

திருக்குடும்ப கன்னியர் மடம், புனித ஆனாள் ம.ம.வி,கலைமகள் வித்தியால யம்

**விசேடகூத்து**


**திறந்த போட்டி**


விக்ரோறியாக் கல்லூரி, புனித மரியாள் பெண்கள் வித்தி,பளை றோ.க.த.க. பாடசாலை

**நாட்டுக்கூத்து- வடமோடி**

**திறந்த போட்டி**

கைதடிநாவற்குழிஅதகபாடசாலை(முற்றும்)

15)  அருகே கூட்டிலுள்ள கோடுகளைக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள கணித உரு எதுவெனத் தெரிவு செய்க.





16) மக்கள் நடமாடும் ஒரு வீதியில் அநேகமாக காணக்கூடிய வற்றைக் கொண்ட விடை எது?
1) பேருந்து - சாரதி - விமானம்
2) வாகனம் - பயணிகள் - காவல்துறை
3) பயணிகள் - புகையிரதம் - சாரதி

17) ஒரு வைத்தியசாலையுடன் தொடர்புடைய மிகச் சரியான சொற்களைக்கொண்ட விடை எது?
1) நோயாளிகள் - மருந்து - உணவு
2) வைத்தியர் - தாதிமார் - பேருந்து
3) வைத்தியர் - நோயாளிகள் - சிகிச்சை


18) கீழே மூன்று வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றிலே வாக்கியம் ஆரம்பிக்கும் எழுத்து திரும்பவும் இடம்பெறாத வாக்கியம் எது?

A - ஆசிரியர் பாடத்தை ஆரம்பித்தார்
B - மாணவர்கள் மைதானத்தில் விளையாடினார்கள்
C - அதிபர் மாணவர்களுடன் அன்பாகப் பேசினார்

1) வாக்கியம் A 2) வாக்கியம் B 3) வாக்கியம் C

19) 


அருகே உள்ள விளக்க படத்தின்படி கீழ்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்று எது.
1) ஊர்மக்களில் சிலர் பாடசாலை யில் படிக்கின்றனர்.
2) ஊர் மக்கள் அனைவரும் பாடசாலையில் படிக்கின்றனர்.
3) ஊர் மக்களின் பிள்ளைகள் அப்பாடசாலையில் படிக்கின்றனர்.




20) மேலுள்ள நிகழ்வினை ஒழுங்குபடுத்தும்போது முதலாவதாக வரும் நிகழ்விற்குரிய படம் எது?
1) படம் A 2) படம் C 3) படம் E

21) மேலுள்ள நிகழ்வினை ஒழுங்குபடுத்தும்போது அமையும் சரியான விடை எது?
1) CEDAB 2) CDEAB 3) ACEDB

☛ **கீழே உள்ள உருக்களை அவதானித்து 22ஆம், 23ஆம் வினாக்களுக்கு விடை தருக.**





22) ஏதோ ஒரு வகையில் ஒற்றுமைப்படுகின்ற இரண்டு உருக்களையும் குறிக்கும் விடை எது?
1) B யும் G யும் 2) A யும் D யும் 3) A யும் E யும்

23) உரு B யுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள இரண்டு உருக்களும் உவை?
1) E யும் H யும் 2) D யும் E யும் 3) C யும் G யும்

24) பாடசாலையில் மாணவர்கள் எந்நேரமும் -
1) படித்துக் கொண்டிருக்க வேண்டும்.
2) விளையாடிக் கொண்டிருக்க வேண்டும்.
3) சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

25) வைத்தியசாலை என்பது -
1) ஆதரவு அற்றவர்கள் தங்குவதற்கான ஓர் இடமாகும்.
2) நோய் உள்ளவர்கள் தற்காலிகமாக வசிக்கும் ஓர் இடமாகும்.
3) வைத்திய ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெறும் ஓர் இடமாகும்.

☛ **கீழேயுள்ள படத்தை அவதானித்து 26ஆம், 27ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

26) 

அருகே உள்ள கூட்டில் சிட்டுக் குருவிகளை விட ... (?)... அதிகமாக உள்ளன.
இவ் இடைவெளியை நிரப்பப் பொருத்தமான சொல் எது?
1) தேன் குருவிகள் 2) கிளிகள் 3) காகங்கள்

27) மேலே உள்ள கூட்டில் அதிகமாக உள்ளவை எவை?
1) குருவிகள் 2) சிட்டுக் குருவிகள் 3) தேன் குருவிகள்

28) காலை நேரத்தில் வீதியால் செல்லும் ஒருவரது நிழல் விம்பம் எங்கே தோன்றும்?
1) முன்னால் தோன்றும் 2) பின்னால் தோன்றும்
3) நிலத்தில் தோன்றும்

29) கீழே காணப்படும் ஒரே வகையான 5 உருக்களில் சற்று மாறுபாடான இரண்டு உருக்களும் எவை?



1) B யும் D யும்
1) C யும் F யும்
1) A யும் C யும்


30) ஒரு மீனாரும் ஓர் ஆமையாரும் ஓர் கொக்காரும் ஒரு ஓட்டப்போட்டிக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். உண்மையில் இந்த ஓட்டப் போட்டியில் யார் ஓடுவார் என நீர் கருதுகின்றீர்?
1) மீனார் 2) ஆமையார் 3) கொக்கார்


31) ரஜீவன் எனும் சிறுவன் ஒரு பந்தினை எடுத்து மேல்நோக்கி எறிந்தான். அந்தப் பந்து மேலே சென்று விழுந்த அமைப்பைக் காட்டும் சரியான படம் எதுவாக இருக்கும்?




32) A எனும் ஆங்கில எழுத்திற்கு அருகே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி பிடிக்கப்பட்டபோது, அவ்வெழுத்து கண்ணாடியினுள் தோன்றிய விதம் யாதாக இருக்கும்?




33)  இது ஒரு சதுர வடிவ அட்டையிலிருந்து ஒரு பகுதி வெட்டி நீக்கப்பட்டுள்ள விதத்தைக் காட்டுகிறது. வெட்டி நீக்கப்பட்ட பகுதி கீழ்வருவனவற்றுள் எது?





34) சலனம் என்பது AKRS என எழுதலாம் எனில், கலசம் என்பதை எழுதிய சரியான முறையைத் தெரிவு செய்க.
1) KAKS 2) KMAS 3) MKAS

35) 12 பென்சில்களை வைத்திருந்த ஒரு ஆசிரியர், அவற்றை 3 மாணவர்களுக்கு சமமாகப் பகிர்ந்து வழங்கியிருந்தார். ஒரு மாணவனுக்கு கிடைத்த பென்சிலின் பின்னம் யாது?
1) $^4/_{12}$ 2) $^4/_8$ 3) $^8/_{12}$

36) ரஜீவனின் சகோதரன் குகன் ஆவான். குகனின் மாமன் ரவிசங்கர் ஆவார். ரவிசங்கருக்கு ரஜீவன் என்ன உறவு முறையாகும்?
1) தம்பி 2) மாமன் 3) மருமகன்

37) P.O என்பது தபால் நிலையத்தைக் குறிக்கின்றது எனின், S.P.O என்பது குறித்து நிற்பது
1) மத்திய தபால் நிலையம் 2) உப தபால் நிலையம்
3) முகவர் தபால் நிலையம்





☛ மேலே குதிரை எனும் சொல் எழுதப்பட்டுள்ளவாறு, அதே ஓசையுடைய மேலும் இரண்டு சொற்கள் எழுதுவதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளது. வெற்றுக்கூடுகளில் விடப்பட்டுள்ள A,B,C ஆகிய கூடுகளில் வரவேண்டிய எழுத்துக்களை அறிந்து 38,39 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

38) கூடு A யில் வரவேண்டிய எழுத்து யாது? ☐
(.................)

39) கூடுகள் B,C ஆகியவற்றுள் வரவேண்டிய எழுத்துக்கள் முறையே எவை? ☐☐
(.................)

40) கீழே உள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி எழுதுவதன் மூலம் ஒரு மூன்றெழுத்துத் தாவரத்தின் பெயரைப் பெறலாம். அதனை எதிரேயுள்ள கூட்டில் எழுதுக?



(.................)

*(பகுதி II வெள்ளிக்கிழமை வெளிவரும்)*

# அரசின் நடவடிக்கைகளால் சர்வதேச மட்டத்தில் அதிருப்தி நிலை வலுக்கிறது

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச மட்டத்தில் இலங்கை தொடர்பான அதிருப்தி வலுத்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி கம்பஹா அத்தனகல்லைப் பிரதேசத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே ஐ.தே.க. பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கரு ஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்துக்கு நாட்டுக்கு நன்மை தரும் விதமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆற்றல் அறவே கிடையாது. அரசாங்கத்தின் கண்மூடித்தனமான செயற்பாடுகள் காரணமாக பொதுமக்கள் நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தால் அவதிப்படுகின்றனர்.

மறுபுறத்தில் சர்வதேச மட்டத்திலும் அரசாங்கத்துக்கு நற்பெயர் இல்லை. அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் பரவலான அதிருப்தியொன்றையே கொண்டுள்ளன.

எங்கள் நாட்டைப் பொறுத்தவரை அணிசேராக் கொள்கையொன்றையே நாங்கள் வெளியுறவுக் கொள்ளையாக வைத்திருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதனை உதாசீனம் செய்து நாட்டை அபகீர்த்திக்குள்ளாக்கி, சர்வதேசத்தின் அதிருப்தியை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது என்றும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)



வங்காள விரிகுடா பரந்த நீரியல் சூழற் தொகுதி எல்லைகளுக்கிடையிலான தீர்வு காணல் பகுப்பாய்வு அறிக்கை தொடர்பாக கருத்துப் பெற்றுக்கொள்ளலும் கிழக்கு மாகாண பங்குதாரர் கலந்தாலோசனை செயலமர்வு நேற்று யாழ்ப்பாணம் பிள்ளையார் ஹோட்டலில் இடம்பெற்றது. இதில் பங்கு பற்றியவர்களை படத்தில் கணலாம்.

# கட்சிகள் மாறினாலும் இந்திய வெளிவிவகார கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது

## கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பிலான நடவடிக்கைகளை அரசியல் வாதிகளிடம் ஒப்படைக்காது அரசாங்க அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டியது அவசியம் எனவும் கட்சிகள் மாறினாலும் இந்தியாவின் வெளிவிவகார கொள்கைகளில் மாற்றம் இருக்காது எனவும் கொழும்புப் பல்கலைக்கழக பேராசிரியர் பிரதிப் மஹானா ஹேவா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் இன்னமும் தமிழ் மக்களின் இதயங்களை வென்றெடுக்க முடியவில்லை என தெரிவித்துள்ள அவர் மாற்றுத் தரப்பினர் இல்லாத காரணத்தினால் வடக்கு-கிழக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவளித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் இளம் அரசியல் கட்சிகளுக்கு கூடுதல் சந்தர்ப்பத்தை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் வடக்கில் ஏனைய அரசியல் கட்சிகள் சுதந்திரமாக அரசியல் நடாத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்ட மூலத்திற்கு அப்பாலான அதிகாரங்கள் வழங்கப்பட்டால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அதற்கு எதிர்ப்பை வெளியிடும் என சுட்டிக்காட்டியுள்ள அவர் இவ்வாறு ஓர் அதிகாரப் பகிர்வு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால் ஆளும் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பிலான நடவடிக்கைகளை அரசியல் வாதிகளிடம் ஒப்படைக்காது அரசாங்க அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டியது அவசியமானது எனவும் இந்தியாவிற்கு விஜயம் செய்த இராஜதந்திரிகள் குழுவில் வெளிவிகார அமைச்சின் உயர் அதிகாரிகள் எவரும் இணைக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய் பிரதிநிதிகள் அரசியல்வாதிகளை விடவும் அதிகாரிகளே அதிகமாகக் காணப்படுகின்றனர் எனவும் கட்சிகள் மாறினாலும் இந்தியாவின் வெளிவிவகார கொள்கைகளில் மாற்றம் இருக்காது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என குறிப்பிட்டுள்ள அவர் இவ்வாறு வழக்குத் தொடுப்பதன் மூலம் ஜனாதிபதியின் அமெரிக்க விஜயங்களை தடுக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# தொலைபேசி கட்டணம் குறைப்பு

ஒரு வலையமைப்பிலிருந்து பிறிதொரு வலையமைப்புக்கான வெளிச்செல்லும் அழைப்பொன்றிற்கான நிமிடக் கட்டணம் ஜூலை முதலாவது வார காலப்பகுதியில் இருந்து 2 ரூபாவிலிருந்து 1 ரூபா 50 சதமாக குறைக்கபட்டவுள்ளதாக இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பல்பித்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஏ)

# ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆனி மாத இதழ்வெளி வந்துள்ளது.

இவ்விதழில் வாழ்வு வளம் பெற இருக்கும் இடம் தேடி, பரிபாடல் தரும் பக்தி பிரார்த்தனை, சிறுவர் கதைகள், புதுமைக்கும் வழிகாட்டியாக நின்றொளிரும் பண்பாட்டு சுடர்கள், சத்தியமே சாயி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

# அபிவிருத்தி என்ற பெயரில் பெருமளவிலான பணவிரயம்

## கரு ஜயசூரிய எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி என்ற பெயரில் பெருமளவிலான பணம் விரயமாக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அத்தனகல்லைவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

அங்கு உரையாற்றிய அவர், தற்போது நாடு குழப்பமடைந்துள்ளதாகவும் மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கும் பிரச்சினையாக உள்ளதெனவும் கூறினார்.

10 ரூபாவில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைக்கு 100 ரூபா செலவிடப்படுதாக குற்றம் சுமத்திய அவர், ஆயிரம் ரூபாவை செலவிட வேண்டிய வேலைக்கு 10 ஆயிரம் ரூபாவை அரசாங்கம் செலவிடுவதாக தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# குழந்தையை ஐயாயிரம் ரூபாவுக்கு விற்ற தாய் பொலிஸாரால் கைது

மாத்தளை பிரதேசத்தில் பச்சிளம் குழந்தையொன்றை ஐயாயிரம் ரூபாவிற்கு விற் பனை செய்த தாயொருவரை இரத்தோட் டைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நான்கு மாதக் கைக்குழந்தையை பணம் கொடுத்து வாங்கியவர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இரத்தோட்டை பிட்டகந்த, லெவகந்த என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஸ்ரீ-4)

# வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் மொழி பயன்பாடு தொடர்பில் விரைவில் தீர்வு

வடக்கு-கிழக்கு நீதிமன்றங்களில் என்ன மொழிப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான கேள்விக்கு விரைவில் பதிலளிக்கப்பட உள்ளது.

வடக்கு-கிழக்கு நீதிமன்றங்களில் எந்த மொழியைப் பயன்படுத்துவது என்பது தொடர்பில் ஆலோசனை வழங்குமாறு யாழ்ப்பாண உயர்நீதிமன்றமொன்று உச்ச நீதிமன்றிடம் கோரியிருந்தது.

இந்த கோரிக்கை தொடர்பில் உச்ச நீதிமன்றம் விரைவில் ஆலோசனை வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

உச்ச நீதிமன்ற நீதியரசர்களான நிமால் காமினி அமரதுங்க, சத்யா ஹெட்டிகே மற்றும் சுரேஸ் சந்திரா ஆகியோரினால் இந்த மனு தொடர்பிலான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

சுன்னாகம் உயர் நீதிமன்றில் ஆங்கில மொழியில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்று தொடர்பில் எழுந்த சர்ச்சையே இவ்வாறு உச்ச நீதிமன்றிடம் ஆலோசனை கோருவதற்கான ஏதுவாக அமைந்துள்ளது.

இந்த மனு தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படவேண்டும் எனவும் அல்லது மனுவை நிராகரிக்க வேண்டும் எனவும் பிரதிவாதி தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரசியல் அமைப்பின் அடிப்படையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


## The Annual General Meeting of Jaffna College Alumni Association

The above meeting will held on the 9th July 2011 at 9.30 am in Ottley Hall.

Your presence is very much appreciated.

**Annual General Meeting Agenda**

- Prayer
- Minutes of the Last Ex. Co Meeting
- Secretary's Report
- Treasurer's Report
- Principal's Report
- Election of new office bearers
- Any Other Business

Hony.Secretary.

(C-351)

# எகிப்தில் விரைவில் தேர்தலை நடத்தி ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க திட்டம்

எகிப்தில் விரைவில் தேர்தல் நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியிடம் பொறுப்பை ஒப்படைக்க இராணுவ ஆட்சியாளர்கள் விருப்பம் தெரிவித்து இருப்பதாக அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஜான் மிக்கெய்ன் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சி செய்து வரும் இராணுவ ஆட்சியாளர்கள் முபாரக்கிற்கு ஆதரவாளர்கள் என்பதால் விரைவில் அவர்களை ஆட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும். புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கும் வரை தேர்தல் நடத்த தாமதம் செய்தால் இது இஸ்லாமிய கட்சிகளுக்கு ஆதரவாகிவிடும் என்று மதச்சார்பற்ற மற்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டிவந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அண்மையில் அந்நாட்டு பிரதமர் எசம்ஷரப் அரவு பத்திரிகையான அல் அரம்மிற்கு அளித்த பேட்டியில், செப்டெம்பர் மாதத்திற்கு பாராளுமன்ற தேர்தலை ஒத்தி வைத்து இருப்பது அரசியல் கட்சிகள் தங்களை தயார்ப்படுத்திக் கொள்ள கூடுதல் நேரத்தை அளிக்கும். மேலும் அதிக கட்சிகள் போட்டியிட வாய்ப்பளிக்கும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் எகிப்து தலைநகர் கெய்ரோ வந்திருந்த அமெரிக்க செனட் சபையின் ரிபப்ளிக்கன்கட்சி உறுப்பினர் ஜான் மிக்கைன் கூறுகையில், பாராளுமன்றில் தேர்தலை நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியிடம் பொறுப்பை ஒப்படைக்க விரும்புவதாக ஹுசைன் தெரிவித்தார்.

மேலும் தேர்தலை மேற்பார்வையிட சர்வதேச பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம். இது போன்ற பரிந்துரைகளை முன்பு முபாரக் நிராகரித்து வந்தார் என்று தெரிவித்தார்.

அமெரிக்க செனட் சபையின் குடியரசு கட்சி உறுப்பினர் ஜான் கெர்ரி கூறுகையில், மக்களால் தேர்வு செய்யப்படும் ஆட்சியாளர்களிடம் ஆட்சியை ஒப்படைக்க இராணுவ ஆட்சியாளர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றார்.

எகிப்து நாட்டை 30 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்த ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக அந்நாட்டு மக்கள் பயங்கர கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதையடுத்து கடந்த பெப்ரவரி 11 ஆம் திகதி அந்நாட்டை விட்டு தனது குடும்பத்தினருடன் முபாரக் வெளியேறினார்.

இதையடுத்து அந்நாட்டின் ஆட்சி அதிகாரம் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதையடுத்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் பாராளுமன்ற தேர்தலும் நவம்பர் மாதத்தில் ஜனாதிபதிக்கான தேர்தலும் நடத்தப்படும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்தனர். (ஸ்ரீ-4)

# புதிய இணையத்தளத்தை ஆரம்பிக்கும் பாப்பரசர்

வத்திக்கான் தொடர்பான செய்திகளை உலக மக்கள் அறிந்து கொள்வதற்கு news.va என்ற இணையத்தளத்தை கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவர் போப் 16ஆம் பெனடிக்ட் இன்று ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

வத்திக்கான் ரேடியோ, டி.வி, நாளிதழ் செய்திகள் மற்றும் படங்களை இதில் பார்க் கலாம். இந்தச் செய்திகள் ஆங்கிலத்திலும் இத்தாலி மொழியிலும் இருக்கும். விரைவில் ஸ்பானிஷ் மொழியிலும்செய்திகள்வெளியிடப்படவுள்ளன. நவீன உலகத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும் என போப் 16ஆம் பெனடிக்ட் விரும்புவதாக வத்திக்கான்அதிகாரிஒருவர்கூறியுள்ளார்.(ஸ்ரீ-4)

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் 26 தீவிரவாதிகள் பலி

பாகிஸ்தானில் வசிரிஸ்தான் பகுதியில் தீவிரவாதிகள் பயிற்சி முகாம்களை அமைத்துள்ளனர். எனவே அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் தெற்கு வசிரிஸ்தானில் ஷாவால் பள்ளத்தாக்கில் உள்ள ஸ்ராகாவ்ரா மலைப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாடி வருவதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் 2 ஆளில்லா விமானங்கள் மூலம் அப்பகுதியில் ஏவுகணை வீசப்பட்டது. அதில் ஒரு ஏவுகணை தீவிரவாதிகள் சென்ற வாகனத்தை தாக்கியது. அதில் வாகனத்தில் பயணம் செய்த 12 தீவிரவாதிகள் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் பக்திகா மாகாணத்தில் பிர்மால் பகுதியில் தாக்குதல் நடத்தி விட்டு மாண்டோய்க்கு வாகனத்தில் திரும்பி கொண்டிருந்த தீவிரவாதிகள் வாகனத்தின் மீதும் ஏவுகணைகள் தாக்கின. இந்த சம்பவத்திலும் 14 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 7 பேர் காயம் அடைந்தனர். (ஸ்ரீ-4)

# மைக்கல் ஜாக்சனின் ஜாக்கெட் 8 கோடி ரூபாவுக்கு ஏலம்

உலக புகழ்பெற்ற பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு மரணம் அடைந்தார். அதை தொடர்ந்து அவர் பயன்படுத்திய பொருட்கள் மற்றும் ஆடைகள் ஏலத்தில் விடப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் அவர் திரில்லா வீடியோ நடன நிகழ்ச்சியின் போது அணிந்திருந்த சிவப்பு மற்றும் கறுப்பு நிறத்திலான தோல் ஜாக்கெட் அமெரிக்காவில் உள்ள லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் ஏலம் விடப்பட்டது.

இந்த ஜாக்கெட் ரூ.8 கோடிக்கு ஏலம் போனது. ஆனால் அதை ஏலம் எடுத்தவர் பெயர் மற்றும் முகவரி வெளியிடப்படவில்லை. மைக்கேல் ஜாக்சன் இறந்தாலும் அவரது புகழ் இன்னும் மறையவில்லை என்பதற்கு இது உதாரணமாகும். (ஸ்ரீ-4)

# வடகொரிய -ரஷ்ய ஜனாதிபதிகள் சந்திப்பு

(டோக்கியோ)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங், ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெத்வதேவை விரைவில் சந்திக்கவுள்ளதாக ஜப்பான் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த சந்திப்பு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரு நாட்டு தலைவர்கள் சந்திப்பின் மூலம் இரு நாடுகளிடையே பொருளாதார ஒப்பந்தம், எல்லை பாதுகாப்பு, கொரிய தீபகற்பத்தில் ரயில் போக்குவரத்தை மேம்படுத்தல் போன்ற ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அணுசக்தி ஆயுதங்கள் குறைப்பது குறித்து ரஷ்யா, அமெரிக்கா, வட தென்கொரியா, சீனா, ஜப்பான் நாடுகள் அடங்கிய கூட்டம் ஒன்றிற்கு ரஷ்யா அழைப்பு விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# இங்கிலாந்து இராணுவத்தை வெளியேறுமாறு பாக். உத்தரவு

பாகிஸ்தான் துணை இராணுவப் படையினருக்கு போர் பயிற்சி அளிப்பதற்காக இங்கிலாந்து இராணுவ ஆலோசகர்கள் 18 பேர் பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பகுதியில் தங்கியிருந்தனர். கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் இவர்கள் பயிற்சி அளித்து வருகின்றனர். 2013ஆம் ஆண்டு வரை பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

பின்லேடன் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின் பாகிஸ்தான் அரசின் நடவடிக்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிர்ப்பை தெரிவித்து வந்த பாகிஸ்தான் அரசு தற்போது இங்கிலாந்து படையினரிடமும் தனது எதிர்ப்பை தெரிவிக்கிறது.

எங்கள் படையினருக்கு நாங்களே பயிற்சி அளித்துக் கொள்கிறோம். அதனால் பாகிஸ்தானை விட்டு இங்கிலாந்து இராணுவ பயிற்சியாளர்கள் வெளியேற வேண்டும் என பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)







இங்கிலாந்துத் தலைநகர் லண்டனில் அந்நாட்டுப் பிரதமர் டேவிட் கமரூனை (வலது), சீனப் பிரதமர் வென் ஜியாபோ (இடது) சந்திப்பதைப் படத்தில் காணலாம்.

# 19 வருடங்களாக தலை ஒட்டிய நிலையில் வாழும் சகோதரர்கள்

ஸ்டீபன் மற்றும் டைலர் டெல்ப் ஆகிய இருவரும் தலையால் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள். இருவரும் 19 வருடங்களாக ஒன்றாகவே வாழ்ந்து வருகின்றனர். ஆனால் மிக அரிதாகவே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துள்ளனர். அதுவும் கண்ணாடி வழியாகத்தான்.

தலையால் ஒட்டியிருக்கும் இவர்களின் முகங்கள் எதிர் எதிர் பக்கங்களாக அமைந்துள்ளன. எனவே ஒருவரை மற்றவர் கண்ணாடியின் உதவியின்றி பார்க்கவே முடியாது. உலகில் இத்தகைய இரட்டையர்கள் பிறந்து இவ்வளவு காலம் உயிர் வாழ்வதென்பது மிகவும் அபூர்வமான ஒரு விடயமாகும். இவர்கள் அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் தென் ஜேர்ஸி பகுதியைச் சேர்ந்தவர்கள்.

முதற்தடவையாக இவர்கள் ஊடகங்களுக்கு முன்னால் தோன்றி தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். இவர்களுள் ஒருவர் எதிர்ப்பால் உணர்வுடையவர். மற்றவர் ஓரினச் சேர்க்கை ஆர்வமுள்ளவர். ஆனால் இவர்கள் வாழ்க்கையில் ஒரு நொடி கூடப் பிரிந்திருக்க முடியாது.

இருவரும் நன்றாக வயலின் வாசிக்கக் கூடியவர்கள். ஒருவருக்கொருவர் சகோதரர்களாக மட்டுமன்றி நல்ல நண்பர்களாகவும் உள்ளனர். இவர்களின் பெற்றோர்கள் இவர்கள் மீது மிகுந்தஅன்பு கொண்டுள்ளனர். இருவருமே இறைவன் தங்களுக்களித்த கொடை என்று அவர்கள் நம்புகின்றனர்.

விசேட தேவைகள் உடைய பிள்ளைகளுக்கான பாடசாலையில்தான் இருவரும் படித்து வருகின்றனர். அதற்கு மேலதிகமாக பிரதான பாடசாலைக்கும் செல்லுகின்றனர்.

படிப்பில் இருவருமே ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்று அவர்களின் ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஒருவர் திரைப் படத் துறையிலும் மற்றவர் இசைத் துறையிலும் ஆர்வம் கொண்டுள்ளதாக இவர்களின் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (ஸ்ரீ-4)

# அல்கொய்தா இயக்கத் தலைவரின் மனைவிக்கு 20 ஆண்டுகள் சிறை

அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவராக இருந்தவர் அபு அயூப் அல் மாஸ்ரி. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த அமெரிக்கா- ஈராக் இராணுவத் தாக்குதலில் இவர் கொல்லப்பட்டார். இவரது மனைவி ஹஸ்னா அலி யாகியா.ஏமன் நாட்டைச் சேர்ந்தவர்.இவருக்கு 3 குழந்தைகள் உள்ளனர். ஹஸ்னாவும் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தில் உறுப்பினராகச் செயற்பட்டார்.

வெடிகுண்டுகள் தயாரித்தல், தற் கொலைப் படை தீவிரவாதிகளுக்கு வெடி குண்டு பெல்ட் தயாரித்து கொடுத்தல் போன்றவற்றில் ஈடுபட்டு வந்தார். எனவே அவரை ஈராக் பொலிஸார் கைது செய்தனர். அவர் மீது ஈராக் உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட ஹஸ்னாவுக்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

அல்கொய்தாதலைவர்அல்மாஸ்ரிஎகிப்தை சேர்ந்தவர். இவர் சுட்டுக்கொல்லப்பட்ட 6 மாதத்துக்கு பின்னர் அவரது மனைவி ஹஸ்னா கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து இவரும் இவரது 3 குழந்தைகளும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டனர். தற்போது இவர்கள் ஏமனில் உள்ள அவர்களது மாமா வசம் ஒப்படைக்கப்பட்டனர்.(ஸ்ரீ-4)

அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது. நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்பு செலுத்த முடியாது.
-வில்காய் ஸ்மித்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்

பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்.
தீராத கோபம் யாருக்கென்ன இலாபம்.

இது சினிமாப் பாடல் வரி. இதனுள் இருக்கக் கூடிய தத்துவம் அற்புதமானது.

பகையை மட்டுமே தெரிந்து வைத்திருப்பவர் எப்போதுமே நிம்மதியாக இருக்க முடியாது. நிம்மதியற்ற மனநிலை துன்பம் தருவதாகும்.

இதன் காரணமாகவே பகைகொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம் என்று கவிஞர் மொழிகின்றார்.

இத்தகைய மனநிலைக்கு ஒரு உதாரணம் தருக என்று யாரேனும் கேட்டால் இலங்கை அரசு என்று கூறமுடியும்.

இலங்கை அரசு என்பது சமகாலத்து அரசை மட்டும் குறித்து நிற்காது. மாறாக, இலங்கையில் காலத்துக்கு காலம் ஆட்சியில் இருந்த அத்தனை அரசுகளையும் குறிப்பதாகும்.

இந்த நாட்டில் வாழக்கூடிய ஒரு தரப்பாக இருக்கும் தமிழினத்தின் மீது இலங்கை அரசுகளுக்கு எப்போதுமே பகை இருந்துள்ளது. இருந்து வருகின்றது. தமிழர்களின் வாக்குகளைப் பெற்றிருக்கின்ற சந்தர்ப்பங்களில்கூட, தமிழினம் தொடர்பான பகை மாறியதேயில்லை.

இவ்வாறு தமிழினத்தின் மீது அவர்கள் பகை கொண்டதற்கான காரணம் யாது எனில், இலங்கை பௌத்த சிங்கள நாடு. பௌத்த சிங்களவரைத் தவிர வேறு எவரும் இந்த நாட்டில் உரிமை கொண்டாட முடியாது என்ற குறுகிய மனநிலையிலேயே பகைமை நீடிக்கின்றது.

இலங்கை அரசின் பகைமை காரணமாக தமிழர்களும் சிங்கள ஆட்சியாளர்கள் மீது பகைமையுடையவர்களாக இருப்பது தவிர்க்க முடியாததே. இவ்வாறாக இலங்கையில் ஏற்பட்டுள்ள இருநிலைப் பகைமை இந்த நாட்டின் அபிவிருத்திக்கும், அதன் எதிர்கால சுபீட்சத்திற்கும் பலவீனமாகவே இருந்து வருகின்றது.

இருதரப்புப் பகைமை காரணமாக இந்த அழகிய நாடு துயரம் மலிந்த-துன்பம் நிறைந்த நாடாகி விட்டது.

இதிலிருந்து மீட்சி பெற வேண்டுமாக இருந்தால் பகைமை இல்லாது போக வேண்டும்.

எனினும் பகைமையைத் துறக்கும் பக்குவம் ஆட்சியாளர்களிடம் அறவேயில்லை.

இலங்கையின் ஆட்சியாளர்கள் கோபம் மிகுந்தவர்களாகவும் இனத்துவப் பாகுபாட்டின் அடிப்படையில் செயற்படுபவர்களாகவும் இருக்கின்றனர்.

இதன் காரணமாக ஈழத் தமிழர்கள் தொடர்பில் எவர் கருத்துத் தெரிவித்தாலும் அவர்கள் மீது பகைமை கொள்ளும் மிக மோசமான கட்டத்தில் இலங்கை அரசு உள்ளது.

இந்த நாட்டின் நிம்மதிக்கு விடுதலைப்புலிகள் தடையாக உள்ளனர் என்று கூறிவந்த இலங்கை அரசுகளின் தீராத கவலை யுத்த வெற்றியோடு முடிந்து விட்டது.

அப்படியானால் இலங்கையில் இப்போது எங்கும் நிம்மதி நிலவ வேண்டும்.

ஆனால், அந்த நிம்மதி இல்லவேயில்லை. மாறாக இலங்கை அரசு இப்போது சர்வதேச சமூகத்துடன் பகைமை கொள்கிறது.

இதன் முடிவு இந்த நாடு என்றுமே துயரத்தின் இல்லமாக இருக்கப் போகின்றது என்பதாகும்.

# வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு போதியளவு பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுக்கு போதியளவு பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

சவால்களை எதிர்நோக்கக்கூடிய அளவிற்கு வெளிவிவகார சேவையில் இணைந்து கொள்ளும் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய கல்வி முறைமையை பின்பற்றிய போதும் நாட்டில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவகம், சர்வதேச கல்விக்கான பண்டாரநாயக்க நிலையம் போன்றன தேசிய அளவில் பயிற்சி நெறிகளை நடத்துவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இளம் வெளிவிவகார சேவை உத்தியோகத்தர்களுக்கு கலந்துரையாடல் பாணியிலான பயிற்சி நெறிகள் நடத்தப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச விவகாரங்கள், தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவம் போன்ற துறைகளில் பயிற்சி அளிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி தேர்தல் நிலவரம் குறித்து கொழும்பு உயர்மட்டக்குழு ஆராய்வு

எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் நிலவரம் தொடர்பாக அறிந்து செல்வதற்கு கொழும்பிலிருந்து தேர்தல் திணைக்களத்தை சேர்ந்த உயரதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந் தது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தக் குழுவினர் பங்கு கொண்டனர்.

இந்தக் குழுவில் முன்னாள் பிரதேசதேர்தல்கள் செயலகத்தின் ஆணையாளர் ஏ.ஜி.தர்மதாச, பாதுகாப்பு செயலகத்தின் உதவிச் செயலக தேர்தல் ஆணையாளர் மதபேவா, பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.பி முகமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு இந்தக் கலந்துரையாடலில் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் என்பவற்றின் வேட்பாளர்களும் கலந்து கொண்டனர்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின் பத்மதேவா உட்பட யாழ். மாவட்டத்தின் அனைத்து பொலிஸ் நிலையத்தின் தலைமையதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# இறைச்சிக்காக மாட்டை வெட்டிய நால்வருக்கு அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

இறைச்சிக்காக மாட்டை வெட்டி வைத்திருந்த நால்வருக்கு 40 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 20 மாதகால சிறைத்தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் நேற்றைய தினம் தீர்ப்பளித்துள்ளது.

சாவகச்சேரி மட்டுவில் பிரதேசத்தில் சம்பவ தினம் இறைச்சிக்காக மாட்டை வெட்டி வைத்திருந்த சமயம் 4 நபர்கள் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு நால்வருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் தலா 5 மாதகால சிறைத் தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிட்டதுடன் சான்றுப் பொருளை அழிக்க மன்றுக்குக் கட்டளையிட்டார். (ஸ்ரீ-24)

# இணுவில் கந்தனின் தேர்த்திருவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பழைமைவாய்ந்த இணுவில் கந்தன் ஆலய பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நடைபெறும்.

நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மாலை 4 மணிக்கு ஆறுமுகப் பெருமானுக்கு பச்சை சார்த்தி திருவூஞ்சல் இடம்பெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும் 8.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் முன்பள்ளி புனரமைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன் கிராம வைகறை முன்பள்ளி மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் சுமார் இரண்டு மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இம் முன்பள்ளியின் புனரமைப்பு வேலைகள் நேற்று செவ்வாய்க் கிழமை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளர் தவநாதன் மற்றும் அக்கராயன் கிராம சேவகர் ஆகியோரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மீள் எழுச்சித்திட்ட பிரதித்திட்ட பணிப்பாளர் இ.இராசாசுவேந்திரன் கலந்து கொண்டார்.

மேற்குறித்த முன்பள்ளியானது யுத்தத்தால் பெரிதும் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)

# கல்விச் சுற்றுலா

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் பாடசாலையிலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்து பூநகரி ஊடாக யாழ்.வருகை தரவுள்ளனர்.

தமது சுற்றுலாவின் போது சுன்னாகம் மட்பாண்ட தொழிற்சாலை, மானிப்பாய் ஜாம் தொழிற்சாலை, விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் யாழ். பல்லைக்கழகம் ஆகியவற்றைப் பார்வையிடுவதுடன் பிரசித்தி பெற்ற ஆலயங்களையும் தரிசிக்கவுள்ளனர். (ஸ்ரீ

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## உன்னைப் பற்றியே சிந்திக்காதே!



சமநிலையில் இருந்து பிறழாதவன், மன சாந்தமுடையவன், இரக்கமும் கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன் மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்.

தீமையை செய்வதால் நமக்கு நாமே தீமை செய்கின்றோம். நன்மையைச் செய்வதால் நமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.

சித்தாந்தங்களையும் தத்துவங்களையும் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை விளையப் போகிறது! நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல் பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால் உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும்.

நம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுயநலங்களிலேயே மிகப் பெரிய பாவமாகும். சுய-நல எண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

# அன்னா ஹசாரே, ராம்தேவுக்கு பதிலடி கொடுக்க ராகுலை களமிறக்க முனைப்பு

(புதுடில்லி)

மத்திய அரசுக்கு நெருக்கடி தரும் பாபா ராம்தேவ், அன்னா ஹசாரே போன்றவர்களுக்கு பதிலடி கொடுக்க ராகுல் தான் சரியான ஆள். அவர்களுக்கு எதிராக ராகுலை முழு வீச்சில் களம் இறக்கிவிட வேண்டும் என காங்கிரஸ் மூத்த தலைவர்கள் கருதுகின்றனர்.

காங்கிரஸ் வட்டாரங்கள் கூறியதாவது, கறுப்பு பணம் மற்றும் ஊழலை ஒழிக்க வலியுறுத்தி அன்னா ஹசாரே, பாபா ராம்தேவ் போன்றோர் மத்திய அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டத்தில் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. போராட்டம் நடத்துவதோடு மட்டுமல்லாமல் மத்திய அரசையும் காங்கிரஸ் தலைவர்களையும் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

வரும் ஓகஸ்ட்மாதம் உண்ணாவிரத போராட்டம் இருக்க போவதாக அன்னா ஹசாரே அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுபோன்ற தனிப்பட்ட நபர்கள் தங்களின் தன்னிச்சையான நடவடிக்கைகளால் அரசுக்கு இணையான அதிகாரமிக்க ஒரு அமைப்பை ஏற்படுத்தி நெருக்கடி கொடுக்க முயற்சிக்கின்றனர்.

இவர்களின் போராட்டத்தில் பின்னணியில் ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புக் களும் பா.ஜ.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் உள்ள ன. காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வருவதை இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் தடுத்து நிறுத்தி விட முயற்சிக்கின் றனர். பா.ஜ.க முகமூடியை அணிந்து கொண்டு சமூக ஆர்வலர்கள் என்ற பெயரில் இவர்கள் நடத்தும் போராட்டங்களை இதற்கு மேலும் பொறுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இவர்களுக்கு எதிராக தீவிரமாக செயற்படுவதற்கு காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுலை களம் இறக்க வேண்டும்.

ராகுலுக்கு மக்களிடையே உள்ள செல்வாக்கு, புகழ் ஆகியவற்றின் மூலமாக அன்னா ஹசாரே, பாபா ராம்தேவ் போன்றோரின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம். பாபா ராம்தேவ், அன்னா ஹசாரே ஆகி யோருக்கு பதிலடி கொடுக்க ராகுல் தான் சரியான நபர். அவர்களின் போராட்டங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் நாடு முழுவதும் ராகுலை தீவிர பிரசாரத்தில் களம் இறக்க வேண்டும். இவ்வாறு காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து மத்திய இணை அமைச்சரும் மாநில காங். மூத்த தலைவருமான பெனி



பிரசாத் வர்மா கூறுகையில், அன்னா ஹசாரே, பாபா ராம்தேவ் ஆகியோரின் முயற்சிகளை முறியடிக்க ராகுல்தான் சரியான நபர். அவர்களுக்கு எதிராக ராகுல் தீவிர பிரசாரத்தில் ஈடுபட வேண்டும். இதற்கு கட்சி மேலிடம் அனுமதிக்க வேண்டும் என்றார். (ஶ்ரீ-4)

# காங்கிரஸ் கூட்டணியால் தான் தி.மு.க. தோல்வி

## ரி.ராஜேந்தர் தெரிவிப்பு

(சென்னை)

காங்கிரஸ் கூட்டணி வைத்ததால்தான் தி.மு.க தோல்வி அடைந்தது என்று இலட்சிய தி.மு.க தலைவர் ரி.ராஜேந்தர் தெரிவித்தார்.

குற்றாலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில் , பெற்றோல், டீசல் விலை மிக அதிகமாக உயர்ந்து உள்ளது. அனைத்து அத்தியாவசிய பொருட்கள் விலையும் உயர்ந்து உள்ளது. இதுதான் மத்திய அரசின் சாதனை.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசுடன் கூட்டணி வைத்ததால் தி.மு.க தோல்வி அடைந்தது. சமச்சீர் கல்வி ஏழை, எளிய மாணவர்களுக்கு பயன்படும். எனவே அ.தி.மு.க அரசு சமச்சீர் கல்வி திட்டத்தை அமுல் படுத்த வேண்டும். சட்டமன்ற புதிய கட்டடத்தில் சட்டமன்றம் இயங்க வேண்டும் என்றார்.

(ஶ்ரீ-4)

# காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவளிக்கப் போவதில்லை

## ஜெயலலிதா திட்டவட்டம்



(சென்னை)

காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு கொடுக்கப்போவதில்லை. அதற்கு ஆதரவு கொடுப்பதாக நான் 2010 ஆம் ஆண்டு கூறிய நிலை தற்போது மாறிவிட்டது.

அந்த வாய்ப்பு அப்போதைய சூழ்நிலையைப் பொறுத்து வழங்கப்பட்ட ஒன்று. தற்போதைய நிலைமையின் பிரகாரம் ஆதரவு வாய்ப்பு இப்போது இல்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே முதல்வர் ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தி.மு.கவுடன் தனது கூட்டணி உறுதியுடன் இருப்பதாகவும் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி கூறி வருவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்த முதல்வர் அரசியலில் எதுவும் நடக்கலாம்.

லோக்சபா தேர்தலுக்கு முன்பு கூட்டணிகள் மாற வாய்ப்பில்லை என்று கூறமுடியாது. அரசியல் கணக்குகள் மாறிக் கொண்டேதான் இருக்கும். அந்தந்த சூழ்நிலையில் உள்ளவற்றைப் பொறுத்துத்தான் அரசியல் கூட்டணிகள் ஏற்படும்.

அரசியலில் இறுக்கமாக இருப்பது சரிவராது. எங்களைப் பொறுத்தவரை எந்த சூழல் ஏற்பட்டாலும் அதை நாங்கள் சமாளிக்க கூடிய வகையில் தயாராகவே இருக்கிறோம். எதிர்கால அரசியல் சூழ்நிலை குறித்து இப்போதே கூற முடியாது. அரசியலில் சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படுவதும் சகஜம். பொறுத்திருந்து பார்ப்போம் என்று ஜெயலலிதா மேலும் தெரிவித்தார்.

(ஶ்ரீ-4)

# பாரதச் செய்திகள்

# திகார்சிறையில் கனிமொழியும் ஸ்டாலினும் உருக்கமான சந்திப்பு



(புதுடில்லி)

திகார் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கனிமொழியை முன்னாள் துணை முதல்வர் ஸ்டாலின் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். அதோடு ராஜா மற்றும் சரத்குமார்ரெட்டி ஆகியோரையும் சந்தித்து ஆறுதல் கூறினார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி திகார்சிறைக்கு வந்து சென்ற ஒரே வாரத்தில் ஸ்டாலினும் வந்து கனிமொழிக்கு ஆறுதல் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் தி.மு.க வின் முன்னணி பிரமுகர்களான கனிமொழியும் ராஜாவும் சிக்கி கைதாயியுள்ளனர். இவர்களோடு சேர்ந்து கலைஞர் டிவியின் நிர்வாகி சரத்குமார் ரெட்டியும் கைதாகியுள்ளார். இவர்கள் மூன்று பேருமே டில்லியில் உள்ள திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் முதல் வாரம் வரை வழக்கு விசாரணைக்காக டில்லி பாட்டியாலா இல்லத்தில் உள்ள சி.பி.ஐ நீதிமன்றிற்கு இவர்கள் தினந்தோறும் பொலிஸார் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வரப்பட்டு மாலையில் சிறைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஆனால் நீதிமன்றிற்கு கோடைகால விடுமுறை விடப்பட்டதில் இருந்து இவர்கள் யாரும் நீதிமன்றிற்கு அழைத்து வரப்படாமல் சிறையிலேயே உள்ளனர். கோடை விடுமுறை முடிந்து எதிர்வரும் ஜூலை 4ஆம் திகதி தான் மீண்டும் நீதிமன்றங்கள் திறக்கப்படவுள்ளன. அதுவரை சிறையிலே இருந்து வருவதால் தனிமைச் சுமையும் சுகாதார வசதியின்மையும் வெயில் கொடுமையும் ஆட்டிப்படைத்ததாக கூறப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் தான் மகளை பார்த்து நேரில் ஆறுதல் தெரிவிக்க நினைத்து கடந்த 21 ஆம் திகதி முன்னாள் முதல்வரும் தி.மு.க தலைவருமான கருணாநிதி டில்லிக்கு வந்தார்.

தன் கறுப்புக்கண்ணாடியை கழற்றிவிட்டு தாரை தாரையாக கண்ணீர்விட்டு கலங்கிய கருணாநிதி கனிமொழிக்கு தைரியமும் நம்பிக்கையும் ஆறுதலையும் அளித்துவிட்டு சென்னைக்கு திரும்பினார். இந்த சூழ்நிலையில் முன்னாள் துணை முதல்வர் ஸ்டாலின் டில்லிக்கு வந்து திகார்சிறைக்கு விரைந்தார். பின் உள்ளே சென்று கனி மொழியை சந்தித்து ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.

சரியாக அரைமணி நேரம் இந்த சந்திப்பு நீடித்தது. இந்தசந்திப்பை முடித்துக் கொண்டு அங்கு அடைக்கப்பட்டிருக்கும் கலைஞர் டிவி நிர்வாகியான சரத்குமார் ரெட்டியை சந்தித்து பத்து நிமிடங்கள் பேசி ஆறுதல் கூறினார்.

அதன் பின்னர் முதலாம் எண் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜாவையும் சந்தித்து பேசினார். சில நிமிடங்கள் அவரோடு பேசி ஆறுதல் தெரிவித்தார்.

(ஶ்ரீ-4)

# கோடிக்கணக்கில் பணம் கடத்தல்

## சாய்பாபா அறக்கட்டளையின் நன்கொடை விபரத்தை அளிக்குமாறு ஆந்திர அரசு அறிவிப்பு

(நகரி)

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் உள்ள சாய்பாபா ஆச்சிரமத்தில் இருந்து சமீபத்தில் காரில் ரூ35 இலட்சம் பணம் கடத்தப்பட்டது. இதே போல் சாய்பாபா ஆச்சிரமத்தில் இருந்து சொகுசு பஸ்சில் கடத்தப்பட்ட பல கோடி பணமும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுபற்றி பொலிஸார் வழக்கு பதிவு செய்து தொடர்ந்து விசாரித்து வருகின்றார்கள். நேற்று முன்தினம் அறக்கட்டளை உறுப்பினர் சீனிவாசனிடம் பொலிஸார் 6 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

இந்நிலையில் சாய்பாபா அறக்கட்டளைக்கு ஆந்திர அரசு அறிவித்தல் அனுப்பி உள்ளது. அதில் கடந்த 5 ஆண்டுகளாக சாய்பாபா அறக்கட்டளைக்கு பக்தர்கள் அளித்த நன்கொடை எவ்வளவு? வளர்ச்சி பணிகளுக்கு அறக்கட்டளை செய்த செலவு எவ்வளவு? வங்கியில் தற்போதுள்ள இருப்பு போன்ற விபரங்களை 10 நாட்களுக்குள் அளிக்கவேண்டும்.

இதேபோல் அறக்கட்டளை உறுப்பினர்களின் நிரந்தர முகவரி, அவர்களது தொழில் போன்ற விபரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆந்திர அரசு விளக்கம் கேட்டு அறிவித்தல் அனுப்பியதை தொடர்ந்து சாய்பாபா அறக்கட்டளை நிர்வாகிகள் அவசர கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடந்தது. இதில் அறக்கட்டளை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இதில் அறக்கட்டளைக்கு ஏற்பட்ட அவப்பெயரை போக்குவது பற்றியும் ஆந்திர அரசுக்கு எவ்வாறு விளக்கம் அளிப்பது என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

(ஶ்ரீ-4)

# டிஆர்எஸ் முறையை ஏற்றது பி.சி.சி.ஐ

## மாற்றங்களுடன் அமுல்படுத்த ஐ.சி.சி. முடிவு

கிரிக்கெட்டில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்திய நடுவரின் முடிபை மறுபரிசீலனை செய்யும் (டிஆர்எஸ்) முறையை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாடு சபை (பி.சி.சி.ஐ) ஏற்றுக் கொண்டுள்ளது.

பிசிசிஐயின் எதிர்ப்பை அடுத்து டிஆர்எஸ் விதிமுறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் பின்னரே பிசிசிஐ அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே இனி சர்வதே கிரிக்கெட் போட்டிகளில் டிஆர்எஸ் முறை அமுல்படுத்தப்படும்.

விதியில் ஏற்படுத்தியுள்ள மாற்றத்தின் படி எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தால் அதனை எதிர்த்து டிஆர்எஸ் விதியின் கீழ் முறையீடு செய்ய முடியாது. இதில் களத்தில் உள்ள நடுவரின் முடிபே இறுதியானது. ஏனெனில் எல்பிடபிள்யூ ஆட்டமிழப்பை முடிவு செய்ய டிஆர்எஸ் விதியில் கடைப்பிடிக்கப் பட்ட பால்-டிராக்கர் தொழில்நுட்பம் இனி இருக்காது. ஹாட் ஸ்பாட் தொழில்நுட்பம் மட்டுமே இருக்கும்.

ஹொங்கொங்கில் திங்கட்கிழமை நடைபெற்ற ஐ.சி.சியின் தலைமை செயற்குழு கூட்டத்தில் இதற்கான முடிபெடுக்கப்பட்டுள்ளது.

இந்த முடிபு ஐ.சி.சியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு அதன் பின் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் டிஆர்எஸ் மீண்டும் அமுலுக்கு வரும்.

டிஆர்எஸ் முறையில் மாற்றம் கொண்டு வர ஐ.சி.சி. ஒப்புக் கொண்டது. பி.சி.சி.ஐக்கு கிடைத்த வெற்றியாகவே கருதப்படுகிறது.

மாற்றங்களுடன் கூடிய டிஆர்எஸ் விதியை ஏற்றுக்கொள்வதாக பி.சி.சி.ஐ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இன்பிஃரா ரெட் கேமரா, ஓடியோ டிராக்கிங் போன்றவற்றையும் பயன்படுத்தலாம். கிரிக்கெட்டில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்கிறோம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்தியா-இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் போட்டியில் டிஆர்எஸ் விதி அமுல்படுத்தப்படும் என்று தெரிகிறது.

International Cricket Council

முன்னராக உலகக் கோப்பையின் போது டிஆர்எஸ் முறையால் பல்வேறு சர்ச்சைகள் கிளம்பியது. இந்த முறையால் சச்சின் உட்பட பல வீரர்கள் ஆட்டமிழப்பிலிருந்து தப்பினாலும் அணித்தலைவர் தோனி உட்பட பலர் இந்த விதிக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

ஆனால் களத்திலுள்ள நடுவர்களின் தீர்ப்பை எதிர்த்து மூன்றாவது நடுவர்களிடம் முறையீடு செய்ய டிஆர்எஸ் விதி வீரர்களுக்கு வாய்ப்பளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



சனத்ஜெசூரியநேற்றைய இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டியுடன் சர்வதேசப் போட்டிகளிலிருந்து விடைபெற்றார். 42 வயதான ஜெயசூரிய 445 ஒரு நாள் போட்டியில் 28 சதங் கள் உட்பட 13,430 ஓட்டங்கள் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வரலாற்றை மாற்றியமைப்போம்

## மகேந்திரசிங் தோனி நம்பிக்கை

மேற்கிந்தியதீவுகள் அணிக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகொண்ட தொடரில் முதல் ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இந்நிலையில் 2வது டெஸ்ட் பிரிட்ஜ்டவுன் நகரில் நேற்று தொடங்கியது. பிரிட்ஜ்டவுன் மைதானத்தில் இந்திய அணி இதுவரை வெற்றி பெற்றதில்லை. 8டெஸ்டில் மோதி 7 படுதோல்விகளை சந்தித்துள்ளது. 1971-ல் நடந்த டெஸ்ட் மட்டும் சமனிலையில் முடிந்தது. மைதானம் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் எச்சரிக்கையுடன் ஆடவேண்டும். போட்டி குறித்து அணித்தலைவர் தோனி அளித்த பேட்டியில், டெஸ்ட், ஒரு நாள் போட்டி, இருபது-20, ஐ.பி.எல் தொடர் என எதுவாக இருந்தாலும் எனக்கு வீரர்கள் நல்ல முறையில் அமைகின்றனர். இதனால் நான் மிகவும் அதிஷ்டசாலி. களத்தில் வீரர்கள் 100 சதவீத அர்ப்பணிப்புடன் செயல்படும்போது எனது பணி எளிதாகிவிடும். 1971க்கு பிறகு தொடர்ச்சியாக இந்த மைதானத்தில் 5 ஆட்டத்தில் தோல்வியடைந்துள்ளோம். இதற்கு இம்முறை முற்றுப் புள்ளி வைக்க முயற்சி செய்வோம்.

அதற்கு ஒருசில பகுதிகளில் நாம் சிறப்பாக செயல்பட வேண்டும். வேகப்பந்து வீச்சாளர்கள் நேர்த்தியாகச் செயல்பட்டு விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும். ஹர்பஜன் சிங் 400 விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைப்பார் என்ற நம்பிக்கை உள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

# ஷரபோவா, ஜோகோவிச் கால் இறுதிக்கு தகுதி


## செரீனா, வீனஸ், வோஸ்னியாக்கி அதிர்ச்சித் தோல்வி

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஷரபோவா, ஜோகோவிச் ஆகியோர் கால் இறுதிக்கு முன்னேறினார்கள். முன்னணி வீராங்கனைகள் செரீனா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், வோஸ்னியாக்கி ஆகியோர் 4ஆவது சுற்றில் தோல்வி கண்டு வெளியேறினார்கள்.

**செரீனா தோல்வி**

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் உயர்வான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.



இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 4-வது சுற்று ஆட்டத்தில் நடப்பு சம்பியனும், 7-ம் நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), 9-ம் நிலை வீராங்கனை மரியோன் பார்டோலியை (பிரான்ஸ்) சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் பார்டோலி 6-3, 7-6(8-6) என்ற நேர்செட்டில் செரீனாவை வீழ்த்தி கால் இறுதிக்கு முன்னேறினார்.

வெற்றி குறித்து பார்டோலி கூறுகையில்;

செரீனாவை வீழ்த்தியதன் மூலம் எனது கனவு நனவாகி இருக்கிறது.

அவர் ஒரு சிறந்த சம்பியன் வீராங்கனை யாவார். அவரை தோற்கடிப்பது மன ரீதியான எளிதான காரியம் அல்ல.

ஆனால் அதனை செய்து முடித்துள்ளேன். இந்த வெற்றி எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்தார்.

**வீனஸ் தோல்வி**

மற்றொரு ஆட்த்தில் 23-ம் நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 2-6, 3-6 என்ற நேர்செட்டில் 32ஆம் நிலை வீராங்கனை பைரோன்கோவாவிடம் (பல்கேரியா) தோல்வி கண்டு வெளியேறினார்.

**வோஸ்னியாக்கி அதிர்ச்சித் தோல்வி**

மற்றொரு ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) அதிர்ச்சி தோல்வியைச் சந்தித்தார். அவர் 6-1, 6-7 (5-7), 5-7 என்ற செட் கணக்கில் சிபுல்கோவாவிடம் (சுலோவாக்கியா) தோல்வி கண்டார்.

இன்னொரு ஆட்டத்தில் 5ஆம் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) 6-4, 6-2 என்ற நேர் செட்டில் 20ஆம் நிலை சீன வீராங்கனை ஷுய் பெங்கை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார்.



**பெலாரஸ் வீராங்கனை வெற்றி**

மற்றொரு ஆட்டத்தில் 4ஆம் நிலை வீராங்கனை அஸரெங்கா (பெலாரஸ்) 6:2, 6:2 என்ற நேர்செட்டில் ரஷ்ய வீராங்கனை நாடியா பெட்ரோவாவை எளிதில் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார். இன்னொரு ஆட்டத்தில் ஜேர்மனி வீராங்கனை லிசிக்கி 7-6 (7-3), 6-1 என்ற நேர்செட்டில் செக் குடியரசின் செட்கோவ்ஸ்காவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 8ஆம் நிலை வீராங்கனை கிவிடோவா (செக் குடியரசு) 6-0, 6-2 என்ற நேர்செட்டில் 19ஆம் நிலை வீராங்கனை விக்மேயரை எளிதில் தோற்கடித்து காலிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார். இன்னொரு ஆட்டத்தில் ஆஸ்திரியாவின் தமிரா பெசெக் 6-2, 2-6 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் கிசெனியா பெர்வாக்கை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

**ஜோகோவிச் வெற்றி**

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 4ஆம் நிலை வீரர் ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) 17ஆம் நிலை வீரர் ரிச்சர்ட் கேஸ்கியூட்டை (பிரான்ஸ்) சந்தித்தார். இதில் முர்ரே 7-6 (7-3), 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 2ஆம் நிலை வீரர் ஜோகோவிச் (செர்பியா) 6-3, 6-3, 6-3 என்ற நேர்செட்டில் 19ஆம் நிலை வீரர் மைக்கேல் லோட்ராவை தோற்கடித்து காலிறுதிக்கு தகுதி பெற்றார். இன்னொரு ஆட்டத்தில் அவுஸ்திரேலியா வீரர் பெர்னார்ட் தமிக் 6-1, 7-5, 6-4 என்ற நேர்செட்டில் பெல்ஜியம் சேவியர்மலிஸியை தோற்கடித்து காலிறுதிக்குள் நுழைந்தார்.

**ஸ்பெயின் வீரர் வெற்றி**

இன்னொரு ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் லோப்ஸ் 3-6, 6-7, 7-6, 7-5, 7-5 என்ற செட் கணக்கில் போலந்து வீரர் லுகாஸ் குபோட்டை போராடி வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

## ஜனாதிபதி மகிந்த வழங்க...

தட்டிக்கழித்தாலோ அந்தத் திசையில் எவருமே முன் முயற்சி செய்வார்கள் என்று கூற முடியாது. கோட்பாட்டு ரீதியில் இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய மூன்று பிரிவுகளை எடுத்துக்கொண்டாலும் இது பொருந்தும். அவர்களில் ஒருவர் ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரி பதவியிலிருந்தாலும் அதே நிலை தான்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சியான ஐ.தே.க., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக தமிழ் கட்சிகள் யாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது வேறெந்த தமிழ்ப் பிரதிநிதித்துவக் கட்சிகளின் மீதும் இல்லாத வகையில் நம்பிக்கை வைத்திருக்கின்றன.

இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை ஓர் அதிகாரப் பகிர்வுப் பொதி குறித்து திருப்தி கொள்ளச் செய்ய முடியாமல் போகுமானால் எதிர்வு கூறக்கூடிய காலத்தில் அவர்களை எவராலும் கூட அரசியல் தீர்வை ஏற்றுக்கொள்ளும் படியாக நிர்ப்பந்திப்பது சாத்தியமாகமாட்டாது. இவ்வாறானதொரு ஸ்தம்பித உறவு நிலையானது இரண்டு சமூகங்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டிற்குமே, ஏன் அதுக்கு மேலும் கூட அழிவைத் தருவதாகவே முடியும்.

எனவே இரு சமூகங்களும் ஒன்றை ஒன்று நம்புவதற்கு ஆரம்பிப்பது அவசியமாகின்றது. மற்றத் தரப்பினரும் மிக நெருக்குதலான அரசியல் கஷ்டங்களை எதிர்நோக்குன்றார்கள். அதுவும் அவர்களின் அரசியல் பெருமையில் மூழ்கியுள்ள பிரிவினரிடம் இருந்து என்பதை உணரவேண்டும்.

அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தாங்கள் மரபு ரீதியில் பெற்றுக்கொண்டுள்ள குணாம்சங்களில் குறைபாடுகள் இருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது ஒரே இரவில் மறைந்து விடமாட்டாது.

அரசு சதி புரிகின்றது என்று கூறாவிட்டாலும் நேர்மையில்லாது நடந்து கொள்கிறது என்று குற்றம் சாட்டுகின்ற அதேநேரம் சிங்கள அரசியல் துறையும், சமூகமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நேர்மை மற்றும் ஆழ்ந்த மனோநிலைகளை மேல் மட்டத்தில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அதன் ஆதரவாளர்களும் உணரவேண்டும். இதுவும் கூட இரட்டை வழிப் பாதையாக இருத்தல் வேண்டும்.

ஈழப் போர் 4 மூலமாக இராணுவம் தமிழ் மக்களை புலிகளின் பிடியிலிருந்து விடுவித்துவிட்டது. அதனால் அவர்கள் நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும் என்ற பிரசாரத்தில் அரசாங்கமும் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்க முடியாது.

கள நிலைமைகள் சிக்கலாகவும் குழப்பகரமாகவும் காணப்படுகின்றன. அப்படியான கருத்துக்களை முன்வைத்து அதில் தொடர்ந்து தங்கியிருக்க முடியாது. போர்க் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உடல் ரீதியானவை மட்டுமல்ல உளரீதியானவையே அதிகம். அதில் அரசியலும் சம்பந்தப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அவர்களை வென்றெடுக்கப் போதுமான அளவில் எதுவும் செய்யப்படவில்லை. இவ்வாறு அக் கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)




## புலிகளின் கோரிக்...

இது தொடர்பில் அவர் கூறியதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஈ.பி.டி.பியும் அதிகாரப் பகிர்வை பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றன. அரசாங்கம் கடந்த பல மாதங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்தது.

அவை அனைத்திலுமே அதிகாரப் பகிர்வு தொடர்பான கோரிக்கைளையே சம்பந்தன் குழுவினர் முன்வைத்தனர். இதேபோன்று தான் ஈ.பி.டி.பியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும், 13-வது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த தெரிவுக் குழு அமைக்குமாறு கோரி வருகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஈ.பி.டி.பியும் அதிகாரப் பகிர்வைப் பெற்றுக்கொண்டு வடக்கு மற்றும் கிழக்கில் சுய நிர்ணய ஆட்சியை அமைத்துக்கொள்ள சூழ்ச்சி செய்கின்றன. இதற்கு இந்தியாவின் அழுத்தம் மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகளும் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தேவைகள் இன்று இலங்கையில் நிறைவேறக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டு வருகின்றன. அதிகாரப் பகிர்வு முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படுமேயானால் வடக்கு மற்றும் கிழக்கில் சுயநிர்ணய ஆட்சி உருவாவதை தடுக்க முடியாது.

எனவே கூட்டமைப்புடனான சந்திப்புக்களின் தீர்மானத்தை அரசு வெளியிட்டவுடன் தாய்நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு தீர்க்கமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (எ)

## ஆட்கடத்தல் பட்டிய...

ரோத ஆட்கடத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் பாலியல் மற்றும் கட்டாய தொழிலாளர் பணிகள் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதன் காரணமாக குறித்த ஆட்கடத்தலுக்கு உள்ளாவோர் மாத்திரம் அன்றி நாடுகளின் பாதுகாப்புக்கும் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஹிலாரி கிளின்டன் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்கடத்தல்களை தடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளும் நாடுகளின் வரிசையில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் தொடர்பாக 2000ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரகடனத்தில் இன்னமும் இலங்கை கைச்சாத்திடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆட்கடத்தல் தொடர்பான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகள் அறிவிக்கப்படவேண்டியது அவசியமானது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சனல் 4...

பிடப்பட்டுள்ளனர்.

சனல் 4 தொலைக்காட்சி சேவையானது போலியான வீடியோ ஒன்றை ஒளிபரப்பியமை அவர்களுடைய நிகழ்ச்சியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு கண்கண்ட சாட்சிகள் யாரும் இல்லாமை மற்றும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட போர்க்குற்றங்களை மறைக்க துணை புரிந்தமை ஆகியனவே சனல் 4க்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆகும். (எ)

## இந்.வெளிவிவகார செய...

புதிய வெளிவிவகாரச் செயலாளராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இந்திய வெளிவிவகாரச் செயலாளராக பதவியேற்கவுள்ள இவர், இரு ஆண்டுகள் இப் பதவியிலிருப்பார் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

வியன்னா, கொழும்பு, வாசிங்டன், தெஹறான் மற்றும் பிரஸல்ஸ் ஆகிய நகரங்களின் இந்திய தூதரகங்களில் அதிகாரியாக இருந்த அவர் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலாளராகவும், இஸ்ரேல், கட்டார் ஆகிய நாடுகளுக்கான இந்தியத் தூதுவராகவும் இருந்துள்ளார்.

அதேவேளை இந்திய வெளிவிவகாரச் செயலாளர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் நிருபமா ராவ் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்படவுள்ளார். (எ)




## எந்தவொரு அரசிய...

காரங்கள் தொடர்பாகவோ இந்தியாவிடமிருந்து எவ்வித அழுத்தங்களும் வழங்கப்படவில்லை.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ், பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார் ஆகியோரின் இலங்கை விஜயம் தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது, இந்திய உயர்மட்டக் குழுவினர் வழக்கமான இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடியதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றிய நிலையில், இந்திய உயர்மட்ட தூதுக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அவசியம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யோசனை முன்வைத்ததாக இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தன்னிடம் சுட்டிக்காட்டியதாகவும், அதேவேளை நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பது என்பது காலம் கடத்தும் தந்திரமல்ல எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், நிபுணர் குழுவின் அறிக்கையில் அரசு மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டாலும் இலங்கையை அனைத்து நாடுகளும் எதிர்க்கவில்லை எனக் கூறியுள்ளார்.

இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஊடகத்துறைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க முதலானோர் கலந்து கொண்டனர். (எ)

## பிக்குகளின் பேச்...

பௌத்த பிக்குகளின் அறிவுரைகளுக்கு செவி சாய்ப்பதில்லை என அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார்.

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு காணப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் ஊடாக தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் இரதாகிருஷ்ணனிடம் கோரியுள்ளார்.

இதேவேளை மலையகத்தில் பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகவும் என்றாவது ஒருநாள் பிரச்சினை வெடிக்கக் கூடும் என இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். (எ)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.